வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.06.2022 புதன்கிழமை | இதழ் : 177 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
MARUTHI MONEY EXCHANGE PVT LTD
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## உயர்ந்தன வரிகள்
## பெறுமதி சேர் வரி 12%
## தொலை தொடர்பு 15%

கொழும்பு, ஜூன் 01

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரியை 8 வீதத்திலிருந்து 12 வீதமாகவும், தொலைத் தொடர்பு வரியை 11.25 வீதத்திலிருந்து 15 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் அலுவலகம்

15

# 21ஆம் திருத்தத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்

### உயர்நீதிமன்றுக்கு அறிவித்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூன் 01

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பாக, சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான இந்திக தேமுனி டி சில்வா உயர் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார

15

# துமிந்தவுக்கு பொது மன்னிப்பு; இடைநிறுத்தியது உயர்நீதிமன்று

## அவரை கைது செய்யவும் கட்டளை

### பொது பாதுகாப்பு அமைச்சருடன் துமிந்தவின் சகோதரர் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 01

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி அளித்த பொது மன்னிப்பை இடைநிறுத்தி உத்தரவிட்டுள்ளது உயர்நீதிமன்றம். அத்துடன், அவரைக் கைதுசெய்து மறியலில் வைக்கவும் நேற்று கட்டளை பிறப்பித்தது.**

ஹிருணிகா பிறேமச்சந்திர, அவரின் தாயார் சுமணா பிறேமச்சந்திர ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. நீதியரசர்கள், பி. பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, அச்சல வெங்கம்புலி ஆகியோர் தலைமையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே, துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி அளித்த பொது மன்னிப்பை இடைநிறுத்தி நீதியரசர்கள் உத்தரவிட்டனர். துமிந்த சில்வா வெளிநாடு செல்வதற்கும் தடை விதித்த நீதிமன்றம், அவரின் கடவுச் சீட்டை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை

15

## 21ஐ தோற்கடிக்க சூழ்ச்சி!

### சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 01

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தோற்கடிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாகவே, தற் போதைய சூழ் நிலையில் உணவுதான் முக்கியம், அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியமில்லை என்ற பரப்புரை முன் னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.எனவே, 21 ஆவது திருத்தச்சட்ட மூலம் கட் டாயம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார். (அ)

## அதீத போதை பாவனையால் மன்னாரில் இருவர் மரணம்?

மன்னார், ஜூன் 01

வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென உயிரிழந்தனர் என்று தெரிவித்து மன்னார் மருத்துவமனையில் இரு சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காட்டாஸ்பத்திரி, பேசாலையை சேர்ந்த வித்திராஸ் மௌசாட் (வயது-35), தலைமன்னாரைச் சேர்ந்த மகேந்திரன் பிரதீப் (வயது-26) ஆகிய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

15



## வேறினத்தவருக்கு காணி விற்றவர் ஊரை விட்டு ஒதுக்கப்பட்டார்!

காரைதீவு, ஜூன் 01

வேறு இனத்தவர் ஒருவருக்கு காணியை விற்பனை செய்தவரின் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டது.

அம்பாறை - காரைதீவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அறிய வருகின்றது.

2 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட காணியை மக்கள் ஒன்றிணைந்து பணம் திரட்டி மீளவும் வாங் கியுள்ளனர் என்றும் அறிய வருகின்றது.

15

## காணாமல் போன சிறுமி வவுனியாவில் சடலமாக மீட்பு

### படுகொலையென சந்தேகம்!

வவுனியா, ஜூன் 01

வவுனியா கணேசபுரத்தில் காணாமல் போன 16 வயது சிறுமி நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டார். சிறுமி கொலை செய்யப்பட்ட பின்னர் சடலம் கிணற்றுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

15

## இராணுவ தளபதியாக லியனகே பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 01

நாட்டின் 24ஆவது இராணுவ தளபதியாக லெப். ஜெனரல் விக்கும் லியனகே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விக்கும் லியனகேக்கு நியமனக் கடிதத்தை வழங்கினார். இதன்போதே, மேஜர் ஜெனரல் தரத்திலிருந்து அவர் லெப். ஜெனரலாகவும் தரமுயர்த்தப்பட்டிருந் தார்.

இதேசமயம், புதிய இராணுவ தளபதி யாக

15

## பணவீக்கம் 39.1ஆக உயர்வு

கொழும்பு, ஜூன் 01

நாட்டின் பணவீக்கம் 39.1 சதவீதமாக அதிகரித்துள்ளது என, இலங்கை மத்திய வங்கி நேற்று அறிவித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மூலம் அளவிடப்பட்ட மே மாதத்துக்கான முதன்

15

## மிருக காட்சிசாலை விலங்குகளுக்கு உணவு வழங்கவும் பணம் இல்லை!

கொழும்பு, ஜூன் 01

கொழும்பு - தெஹிவளையில் உள்ள மிருகக் காட்சி சாலை மற்றும் நாட்டின் ஏனைய இடங்களிலுள்ள மிருகக்காட்சி சாலைகளில் உள்ள விலங்குகளுக்கு நாளாந்தம் உணவு வழங்குவதற்கு பணம் இல்லை என்று அமைச்சரிடம் விலங்கியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின்போது விவசாய, வனவிலங்கு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் விலங்கியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உல்லாசப் பயணிகளின் வருகை குறைவு, எரிபொருள் தட்டுப்பாடு, உணவுப் பொருட்களின் விலையேற்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

பால் வியாபாரம் செய்து மிகக் குறுகிய காலத்திலேயே மிகப் பெரிய லட்சாதிபதியான ஒருவரை பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார்.

இவ்வளவு விரைவாக நீங்கள் இந்த தொழிலில் முன்னேற்ற மடையவும், சாதனை செய்யவும் என்ன காரணம் என்று நீங்கள் எதைச் சொல்வீர்கள் என்று கேட்டார் நிருபர்.

அதற்கு அவர் சொன்னார்,

நான்கே நான்கு விசயங்கள் தான் எனது வெற்றிக்கு காரணம். ஒன்று, மாட்டுக்கு நல்ல பச்சைப் புல்லு உணவாகக் கொடுக்கணும். ரெண்டு, விடியக் காலையிலையே பாலைக் கறந்துவிடவேண்டும். மூன்று, பாலில் நான்கு லீட்டருக்கு ஒரு லீட்டர் தண்ணீர் கலந்துவிடலாம். நான்கு, அதெல்லாத்தையும் விட முக்கியம், பாலைக் கறக்கும்போது மாட்டின் சொந்தக்காரர் கண்டுவிடக்கூடாது.

உலக வங்கி எழுநூறு மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குகின்றது என்ற செய்தி வெளிவந்த மறுகணமே அதனை மறுத்து உலக வங்கி செய்தி வெளியிட்டது.

இதுபோலவே, இதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் உதவுகின்றது என்று வெளிவந்த செய்தியையும் சர்வதேச நாணய நிதியம் மறுத்திருந்தது ஞாபகமிருக்கலாம்.

அதுபோலவே, அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு பற்றிய செய்தியும் பிரதமர் அலுவலகம் தெரிவித்ததாக வந்த அந்த செய்தியை பின்னர் அந்த அலுவலகமே மறுத்திருந்தது.

ஏன் இவ்வாறு செய்திகள் வெளிவருவதும் பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அதனை மறுப்பதும் அடிக்கடி நடக்கின்றன என்ற கேள்வி மனதில் எழுந்தது.

கொழும்பில் விபரம் அறிந்த சில ஊடகர்களுடன் இது குறித்து கேட்டபோதுதான் உண்மைகள் புலப்பட ஆரம்பித்தன.

ரணில் பிரதமராகப் பதவியேற்றதும், அவர் மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்காக சில நிறுவனங்கள் பணிக்கு அமர்த்தப்பட்டதாகவும், அந்த நிறுவனமே அடிக்கடி இதுபோன்ற செய்திகளை வெளியிட்டுவருவதாகவும் அறியமுடிந்தது.

அதனால்தான், உதவிகள் கிடைக்கவிருப்பது தொடர்பான செய்திகள் மிக முக்கியத்துவம் கொடுத்து சில முன்னணி ஊடகங்களில் வெளிவருகின்றன.

ஆனால், அதனை குறிப்பிட்ட நிறுவனங்கள் மறுக்கின்ற போது, அது எங்காவது ஒரு சிறிய செய்தியாக வெளிவருகின்றது என்றார் விபரம் தெரிந்த அந்த ஊடகர்.

ரணில்மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தினால் மாத்திரம் பிரச்னைகள் தீர்ந்துவிடப்போவதில்லை.

ஆகக் குறைந்தது, பொருட்களின் விலைகள் குறைகின்றனவோ இல்லையோ, தாராளமாக கிடைக்கின்ற நிலைமை யாவது வரவேண்டும். அப்போது, ரணில் மீதான நம்பிக்கை மக்களுக்கு தானாகவே வந்துவிடும்.

இலங்கை இன்றுள்ள நெருக்கடிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று, நமது சுற்றுலாத்துறை கண்ட வீழ்ச்சிதான் என்பதை முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

வருடம்தோறும் சுமார் நான்கு பில்லியன் டொலர்களுக்கு அதாவது, நான்காயிரம் மில்லியன் டொலர்களுக்கு அதிக வருமானத்தை நமக்கு பெற்றுத்தருவது இந்த சுற்றுலாத்துறை. இரண்டாயிரத்தி பத்தொன்பதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் முற்றாக முடங்கிய சுற்றுலாத்துறை பின்னர் கொரோனா நெருக்கடியால் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளானது. அதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் பதினைந்து பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை நாடு இழந்து போனது.

அளவுக்கதிகமான அரச செலவினங்கள், பாரிய அளவிலாள ஊழல்கள், (அது யார் ஆட்சியிலிருந்தாலும் நடந்தது என்பது வேறு விடயம்), போர்க் காலத்தில் கடமைக்கு அமர்த்தப்பட்ட அளவுக்கதிகமான இராணுவத்தினரை தொடர்ந்து வைத்துக்கொண்டு அவர்களுக்காக செலவிடப்படும் பாரிய செலவினம் என்று பல காரணிகள் அந்த பொருளாதார நெருக்கடியின் பின்னால் இருந்தாலும், நாட்டின் டொலர் இருப்பு ஒட்டுமொத்தமாக இல்லாமல் போனதற்கு டொலர் வருமானமும் நின்றுபோனது ஒரு காரணம்.

மீண்டும் சுற்றுலாத்துறை எழுந்து தவழத் தொடங்கிய போது. நாடு போராட்டங்களால் முடங்கிவிட, சுற்றுலாத்துறை மீண்டும் சுருட்டிக்கொண்டு படுத்துவிட்டது.

அண்மையில், பிரிட்டனின் 'ஸ்கை' தொலைக்காட்சி பிரதமரைப் பேட்டிகண்டபோது, உல்லாசப்பயணிகள் வருகை பற்றிய கேள்விக்கு, நாட்டின் போராட்டங்கள் உல்லாச பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாது என்று நம்பிக்கை கொடுப்பதை விடுத்து, நகைச்சுவையாக, உல்லாசப் பயணிகளும் வந்து போராட்டங்களில் கலந்துகொள்ளலாம் என்று

வடிவேலு பாணியில் பதிலளித்திருந்ததை காணமுடிந்தது.

பிரதமரின் இமேஜை அதிகரிக்கவென நிறுவனங்களுக்கு பணத்தை செலவிட்டு மக்களை மீண்டும் ஏமாற்றாமல், இனியாவது கிடைக்கும் ஒவ்வொரு நாட்களையும் பயனுள்ளதாக மாற்றுவதற்கு யோசிக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# சிறுமி ஆயிஷா படுகொலைக்கு நீதி கோரி யாழிலும் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

அட்டுலுகமை சிறுமி ஆயிஷா படுகொலைக்கு நீதி கோரி நேற்று யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பெண்கள் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று காலை ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.




நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் ஆயிஷாவிற்கு நீதி கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழக அரசின் நிவாரணம் பகிர்ந்தளிப்பில் புறக்கணிப்பு!

## குற்றஞ்சாட்டுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

முல்லைத்தீவு, ஜூன் 01

இந்தியா தமிழ்நாட்டு அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய நிவாரணப் பொதிகளை பகிர்ந்தளிப்பதில் வன்னி மாவட்டத்துக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அதில், தமிழக அரசு வழங்கிய நிவாரணப் பொதிகள் பகிர்ந்தளிப்பதில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு ஒப்பீட்டளவில் சிறியளவு பொதிகளே ஒதுக்கப்பட்டுள்ளன என்பது கண்டிக்கத்தக்கது.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயம், மீன்பிடித் தொழில்களைக் கொண்ட மாவட்டம். உரத் தட்டுப்பாட்டினாலும் எரிபொருள் தட்டுப்பாட்டாலும் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியிலான நெருக்குவாரங்களைச் சந்திக்கும் எமது மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு வழமையான புறக்கணிபபை இந்த அரசாங்கம் செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இலங்கையில் அதிக பெண் தலைமைத்துவ குடும்பங்களையும் அங்கவீன முற்றவர்களையும் கொண்ட எமது மாவட்டங்களுக்கு உடனடியாக அதிக நிவாரணப் பொதிகளை அவதியுறும் மக்களுக்கு வழங்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்க இந்திய அரசும் தமிழக முதல்வரும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# சிறுமி ஆயிஷா படுகொலை; கிளிநொச்சியிலும் போராட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 01

பண்டாரகமை - அட்டலுகம சிறுமி பாத்திமா ஆயிஷா கொலையை கண்டித்து கிளிநொச்சியிலும் நேற்று கண்டன போராட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பக்க ஏ - 9 வீதியில் வடக்க, கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிளிநொச்சி பழைய கச்சேரியிலிருந்து பேரணியாக புறப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு சென்று மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ஐ)

# மின் துண்டிப்பு மீண்டும் அமுல்!

கொழும்பு, ஜூன் 01

நாடளாவிய ரீதியில் மீண்டும் மின்வெட்டை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரையான மின்வெட்டு நேரம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை 2 மணி நேரமும் சனிக்கிழமை ஒரு மணி நேரமும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படவு ள்ளது. ஞாயிற்றுக்கிழமை மின்வெட்டு இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிறப்பு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 01

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக் களின் அனுசரணையில் நடக் கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுகமைப் பில் 23ஆவது தொடர் சொற்பொழிவு மண்கும்பான் முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை மண்டபத்தில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், "நாவலர் பெருமானின் கல்வி மரபே இன்றைய தேவை" என்ற தலைப்பில் இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் சொற்பொழிவாற்றுவார். இதன் நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஜூன் 01

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப் புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன், "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
01.06.2022 புதன்கிழமை
பிலவ வருடம், வைகாசி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# உண்மையான மாற்றங்களே தேவை!

பொருளாதார நெருக்கடியின் விளைவாக, சில மாற்றங்கள் நிகழ்வதான தோற்றப்பாடு தெரிகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பு ஒன்றுக்கு, உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருக்கின்றது. கொலைக் குற்றவாளியான துமிந்த சில்வா என்பவருக்கு வழங்கிய பொது மன்னிப்புக்கே, உச்ச நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றது. இதன் மூலம், நீதித் துறை புத்துயிர் பெறுவதான தோற்றம் தெரிகின்றது. அமெரிக்காவின் கறுப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ராஜபக்ஷக்கள் வீழ்ச்சியுற்றிருக்கின்ற பின்னணியில்தான் இவ்வாறான விடயங்கள் நடந்தேறியிருக்கின்றன. இவற்றை மேலோட்டமாகப் பார்த்தால், இலங்கைத் தீவு மாற்றங்களுக்கு ஆட்படுவதான தோற்றமொன்று காண்பிக்கப்படுகின்றது. நீதித்துறையின் சுயாதீனம், சர்வதேச நன்மதிப்பை வெற்றெடுத்தல் போன்ற விடயங்கள் இன்றைய சூழலில் இலங்கைத் தீவுக்கு தேவைப்படுகின்றது. ஆனால் இவைகள் மூலம், நாடு ஒரு நிரந்தரமான மாற்றத்துக்கு தயராகி வருவதாக, அவசரப்பட்டு நம்பிவிட வேண்டியதில்லை.

இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் விடயங்களை, சில தென்னிலங்கை புத்திஜீவிகள், இலங்கையின், உள்ளூர் ஜனநாயகத்தின் மீள் வருகையின் ஆரம்பமென்று வர்ணிப்பதை காணமுடிகின்றது. எந்த அடிப்படையில் இதனை இலங்கையின் உள்ளூர் ஜனநாயகத்தின் மீள்வருகை என்று கூறமுடியும்? இலங்கையின் உள்ளூர் ஜனநாயகம் எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்?

இலங்கையின் ஜனநாயகம் - இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்தே பழுதடையத் தொடங்கிவிட்டது. தமிழ் மக்கள் கௌரவத்துடனும், சமஅந்தஸ்துடனும் வாழ்வதற்கான ஜனநாயக ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கையுடன், தமிழர் அரசியல் தலைநீட்டியது. இலங்கை சிறந்ததொரு ஜனநாயக ஆட்சிமுறைக்குள் இருக்க வேண்டுமாயின், இலங்கையின் அரசியல் யாப்பில் தமிழ் மக்களின் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று, அன்றிருந்த தமிழ் தலைவர்கள் வாதிட்டனர். இந்த அடிப்படையில்தான் சமஷ்டி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனாலும், அதிலும் சமரசம் செய்வதற்கும் தமிழ் தலைவர்கள் இணங்கினர். பண்டா - செல்வா உடன்பாடு அடிப்படையில் சமஷ்டிக்கான உடன்பாடல்ல. ஆயினும், தமிழர்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக்கூட, சிங்கள தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, அரசியலுக்கு வருவதற்கு முன்னர் சமஷ்டிக் கோட்பாட்டை சிறந்த முறையாக முன்மொழிந்திருந்தார். ஆனால், அரசியலுக்கு வந்ததும் அதனை கடுமையாக எதிர்ப்பாளராக மாறினார். தனிச்சிங்கள சட்டத்தை அமுல்படுத்தி, இலங்கையின் ஜனநாயகத்தை சீரழித்தார். அன்று பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட பாதையில்தான், இன்றும் நாடு சென்று கொண்டிருக்கின்றது. 1978 அரசியல் யாப்பின் மூலம், எல்லையற்ற அதிகாரங்கள், ஒரு நபரை நோக்கி குவித்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, அதிகாரத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், இந்த நாட்டுக்கு சமஷ்டி முறைதான் சிறந்ததென்று திருவாய் மலர்ந்திருந்தார். ஆனால், அதிகாரத்தில் இருக்கின்றபோது, தமிழர்களை எவ்வாறு அடக்கி வைக்கலாமென்று மட்டுமே சிந்தித்தார்.

இலங்கையின் ஜனநாயகம் என்பது - எப்போதுமே, சிங்கள பெரும்பான்மை வாதத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையில் அமைந்ததில்லை. இன்றுவரையில் இதுதான் நிலைமை. இன்று, நாடு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில், சிங்கள மக்கள், குறிப்பாக இளைஞர்கள், ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகார மையத்துக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றனர். அவர்கள்தான், கொழும்பு - காலிமுகத்திடலில் முகாமிட்டு, தங்களின் அமைதியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அது மேலும் வலுவடையவும் வாய்ப்புண்டு.

நாடு முழுவதும், மக்களின் ஆதரவு அதற்குண்டு. ஏனெனில், பொருளாதார நெருக்கடியிருக்கும் வரையில், அவர்களுக்கான ஆதரவும் நிச்சயம் இருக்கும். ஆனால், பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிட்டால், அனைவரும் கலைந்துவிடுவர். அவர்கள் கலைந்து செல்லும் இடத்தில், தமிழ் மக்களின் பிர்ச்னைகள் அப்படியே கவனிப்பாரற்று கிடக்கும். காலிமுகத்திடல், முள்ளிவாய்க்காலுக்கு விளக்கேற்றுவதுடன் விடயங்கள் முடிந்துவிடவில்லை. கொழும்பில் வாழும் ஒரு மத்தியதர வர்க்க தமிழருக்கு அது மகிழ்ச்சியையும், திருப்தியையும் கொடுக்கலாம். ஆனால், பாதிக்கப்பட்ட திமிழ் மக்களின் பிரச்னை, விளக்கேற்றுவதுடன் முடிந்துவிடவில்லை - முடிந்துவிடாது. தங்களைத் தாங்களே தீர்மானித்து வாழ்வதற்கான அரசியல் ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படாத வரையில், தமிழ் மக்களுக்கு எவையுமே மாற்றங்கள் இல்லை.

கட்டமைப்பு மாற்றம் என்பது, தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கைகளுக்கான அரசியல் தீர்வை உட்கொண்டிருக்க வேண்டும். ஆகக் குறைந்தது, எதிர்காலத்தின்மீது, நம்பிக்கை வைக்கக் கூடியளவுக்காவது, சில மாற்றங்கள் நிகழ வேண்டும். மாகாண சபைகள் மத்தியின் தலையீடின்றி, இயங்குவதற்கான சூழலாவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான், மாற்றங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் நம்பிக்கைகொள்ள முடியும். இல்லாவிட்டால், அனைத்துமே, ஓர் ஏமாற்று நாடகத்தின் காட்சிகளாக மட்டுமே முடிந்துபோகும்.

# ராஜபக்ஷவினரை சாடும் விஜயதாஸ ராஜபக்ஷ!

அலசுவது இராஜதந்திரி

அரச தரப்பிலிருப்போர் மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதல் அரசில் அங்கம் பெறுகின்ற ஏனைய ராஜபக்ஷவினர் மீதான அதிருப்தி அதிகரித்திருத்திருப்பதை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியில் அஸ்கிரிய பீடாதி பதியைச் சந்தித்த பின் னர் ஊடகவியலாளருட னான சந்திப்பொன்றின் போதே விஜயதாஸ ராஜபக்ஷ தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியி ருந்தார்.



"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவாரேயானால் பாராளு மன்றில் ஆளும் கட்சி யான சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் கூடுதல் ஆதரவுள்ளவராக இருக்கின்ற பஸில் ராஜபக்ஷவே ஜனாதிபதியாக வரமுடியும். அவ்வாறு நிகழுமேயானால் நாடு எத்தகைய மோசமான நிலையை அடையும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாதுள்ளது", என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் கருத்து வெளியிட்டபோது தமது அபிப்பிராயத்தின்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓர் அரசியல் அனுபவமில்லாத தலைவராவார். அத்துடன், ஜனாதிபதி ராஜபக்ஷ ஒரு தோல்வியுற்ற தலைவரென்றே தாம் கருதுகிறாரென விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி வகித்தபோது விஜயதாஸ ராஜபக்ஷவின் பொழும்பு இல்லத்தின்மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தச் சமயம் விஜயதாஸ ராஜபக்ஷ எவ்வித ஆபத்துமின்றி தப்பியிருந்தார். அவர் அப்போது வெளியிட்ட சில கருத்துகள் சம்பந்தமாகவே ஏவிவிடப்பட்ட துப்பாக்கிதாரிகளால் மிரட்டப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் பின்னர் ராஜபக்ஷ தரப்பினரோடு அரசாங்கத்தில் இணைந்து கொண்டாலும் நீதி அமைச்சர் என்ற வகையில் நாட்டு மக்களின் தற்போதைய மனநிலையை அறிந்தவராகவே ஜனாதிபதி ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ தரப்பினரின் தவறான ஆட்சி அதிகார அணுகுமுறைகளை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சாடியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்திலுள்ள ராஜபக்ஷ தரப்பினரை அகற்றிவிட்டால் மாத்திரம் நாட்டின் ஆட்சி அதிகார மற்றும் பொருளாதார நிலவரங்கள் சீரடைந்துவிடும் என்று கொள்வதற்கில்லை. தற்போதைய அரசியலமைப்பு நடைமுறையை மாற்றியமைத்தால் மட்டுமே ஒரு நேர்த்தியான ஆட்சி அதிகார முறைமையை எதிர்காலத்தில் எதிர்பார்க்க முடியும் எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளவற்றையும் கடந்த வாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷ பாராளுமன்றில் உரையாற்றும்போது, இரு தடவைகள் ஜனாதிபதி பதவியை வகித்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து கௌரவமாக ஓய்வு பெற்றிருக்க வேண்டுமெனக் கூறியதையும் எடுத்து நோக்கும்போது நாட்டு நலனைப் பொருட்படுத்தாது தமது சொந்த குடும்ப நலனிலேயே மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் குறிப்பாக இருக்கின்றமையை அறிய முடிகின்றது.

இலங்கையில் ஆட்சி அதிகார விடயங்களில் இன்றிருப்போரை நோக்கும்போது நிறைவேற்று அதிகாரம் முன்னெப்போதும் இல்லாதவாறு மிக மோசமான முறையில் தற்போது துஷ்பியோகம் செய்யப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ஓர் ஆரோக்கியமான பாராளுமன்ற ஆட்சி நிலவியிருக்குமேயானால் கோட்டாபய ராஜபக்ஷவால் பதவிக்கு வந்திருக்க முடியாது. அத்துடன், பாராளுமன்றில் எதிர்க்கட்சிகளின் கேள்விக்கணைகளுக்கு அவரால் பதிலளித்திருக்கவும் முடியாது.

ஒரு நாடு நெருக்கடி நிலையை எதிர்நோக்கும்போது ஆட்சி அதிகார விடயங்களில் இருப்போரே அரச நிர்வாகம், பொருளாதார நிலவரம் என்பவை தொடர்பாக நாட்டு மக்களுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். ஆனால், தற்சமயம் நாட்டு மக்கள் இன்றைய ஆட்சியாளர்கள்மீது முற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளதையே சாதாரண ஓர் அமைச்சரல்ல. நீதி அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷவே விமர்சித்திருப்பதன் மூலம் அறிய முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஜுன் - 01 புதன்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை




**மேடம்**
பொன் பொருள் வரவு உண்டாகும்.புதிய நட்புகளால் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும்.அரசு வழியில் முயற்சிகள் இழுபறியாகும். திடீர் வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்**
செயல்களில் தடுமாற்றம் ஏற்பட்டாலும் முடிவில் மகிழ்ச்சியான நிலையை அடைவீர்கள்.எதிரிகள் விலகுவர். எதிர்பாராத தடைகளால் செயலில் இழுபறி உண்டாகும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். திடீர் செலவுகள் ஏற்படலாம் விழிப்புடன் செயல்படுங்கள்.மனதிற்கினிய சம்பவம் ஒன்று நடைபெறும். எதிர்பாலினரால் ஆதாயம் அடைவீர்கள்.

**கடகம்**
நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். தொழிலில் இருந்த தடைகளை சரி செய்வீர்கள். எதிர்பாராத வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்**
அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். லாபம் அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும். எதிர்பார்த்த வரவுகள் உங்கள் கைக்கு வரும். முயற்சியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி**
திட்டமிட்ட வேலை நடந்தேறும். குடும்பத்தில் குழப்பம் தோன்றி உங்களை சங்கடப்படுத்தும்.வேலையில் தடை உண்டானாலும் இறுதியில் உங்கள் முயற்சி வெற்றியாகும்.எதிர்பாராத தடைகளை சந்திப்பீர்கள்.

**துலாம்**
சட்டத்திற்கு புறம்பான செயலால் சங்கடம் அடைவீர்கள். தீயவர்களை விட்டு விலகுவது நல்லது. யோசிக்காமல் எதிலும் ஈடுபட வேண்டாம். எதிர்பாராத பிரச்னைகள் தேடிவரும். தாமதம் ஏற்படும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத இடத்தில் இருந்து பணம் வரும். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். மற்றவர்களின் உதவியின்றி நினைத்ததை சாதிப்பீர்கள்.முயற்சிக்கேற்ற லாபத்தை அடைவீர்கள்.

**தனுசு**
நினைத்ததை சாதிப்பீர்கள். உங்களுடைய செல வாக்கு உயரும். யோகமான நாள்.எதிரிகள் விலகிச் செல்வர். திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.உற்சாகம் அதிகரிக்கும்.

**மகரம்**
முயற்சியில் பின்னடைவு ஏற்படும். சொத்தில் இருந்த பிரச்னைகள் மீண்டும் தலை எடுக்கும். அலைச்சல் அதிகரிக்கும்.உங்களுடைய செயல்கள் இழுபறியாகும். நினைத்ததை சாதிக்க முடியாமல் போகும்.

**கும்பம்**
தாய்வழி உறவினர் ஆதரவுடன் செயல்படுவர். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். கடும் முயற்சிக்குப்பின் உங்களின் எண்ணம் நிறைவேறும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்டநாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். ஈடுபடும் செயல்களில் வெற்றி காண்பீர்கள்.துணிவுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். சகோதரர் வழியில் உதவி கிடைக்கும். நிதானமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

*மாநிலங்களவை தேர்தல்:*

# போட்டியின்றி தி.மு.க., அ.தி.மு.க வேட்பாளர்கள் தெரிவாக வாய்ப்பு?

**சென்னை, ஜுன் 01**

**மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிய வருகின்றது.**

தமிழகம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் ஜுன் முதல் ஓகஸ்ட் வரை 57 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைகிறது. இதையடுத்து, புதிய உறுப்பினர்கள் தேர்வுக்கான தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

இதன்படி, வரும் ஜுன் 10ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. முன்னதாக, கடந்த 24ஆம் திகதி தொடங்கிய வேட்புமனு தாக்கல் நேற்றுடன் முடிவடைகிறது. இன்று மனுக்கள் பரிசீலனை நடைபெறுகிறது. வரும் மூன்றாம் திகதி மாலை 3 மணி வரை வேட்பு மனுக்களை திரும்பப் பெற அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் வறிதாகும் 6 மாநிலங்களவை இடங்களுக்கு, சட்டப் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை அடிப்படையில் தி.மு.கவுக்கு 4, அ.தி.மு.கவுக்கு 2 இடங்கள் கிடைத்துள்ளன. இதில் 3 இடங்களில் தி.மு.கவும், ஓர் இடத்தில் காங்கிரஸும் போட்டியிடுகின்றன. அ.தி.மு.க. சார்பில் 2 பேர் போட்டியிடுகின்றனர்.

ஒரு வேட்பாளருக்கு 34 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவுவேண்டும். அத்துடன், வேட்புமனு தாக்கலின்போது 10 சட்டப் பேரவை உறுப்பினர்கள் முன்மொழிவுக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

இன்று நடைபெறும் வேட்பு மனு பரிசீலனையின்போது, முன்மொழிவுக் கடிதம் இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு தகுதியான வேட்புமனுக்கள் வராதபட்சத்தில், தேர்தல் நடைபெறாது. எனவே, இறுதி அறிவிப்பு வரும் ஜுன் 3ஆம் திகதி வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சிங்கள குடும்பத்துக்கு உறவுகரம் நீட்டிய தமிழர்!



*காரைக்குடி, ஜுன் 01*

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி உள்ள நிலையில் மன உளைச்சலில் இருந்த சிங்கள குடும்பத்துக்கு காரைக்குடி குடும்பத்தினர் உறவுக் கரம் நீட்டியுள்ளனர்.

காரைக்குடியைச் சேர்ந்த அம்சராஜ் மகாதேவன் என்பவர் இலங்கை சென்றபோது, சிங்கள இனத்தவரான கல்லூரி மாணவி யுதாரி குடும்பத்துடன் அறிமுகம் ஏற்பட்டது.

தற்போது இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, மக்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையால் மாணவி யுதாரி குடும்பத்தினரும் மன உளைச்சலில் இருந்தனர். இதையடுத்து அவரையும், அவரின் தந்தை சுமித், தாய் கங்கானி, பாட்டி பிரேமாவதி ஆகியோரை அம்சராஜ் மகாதேவன் தமிழகம் வரவழைத்தார். மேலும் அவர்களை பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்று மனஅமைதி கிடைக்க வழிவகை செய்தார்.

இதுகுறித்து யுதாரி கூறுகையில், இந்தியாவுக்கு தற்போதுதான் முதன்முறையாக வந்துள்ளோம். தமிழகத்தை எனக்கு மிகவும் பிடிக்கும். கலாசாரம், பழக்க வழக்கம் மிகவும் அருமை. தமிழகம் வந்துள்ளது எங்களுக்கு மன நிறைவாக உள்ளது", என்றார். (ஐ)

# 2026இல் பா.ம.கவே ஆட்சி அமைக்கும்!

*அன்புமணி ராமதாஸ்*




*சென்னை, ஜுன் 01*

2026 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சி அமைக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து வரும் அவர், அமைச்சர் துரைமுருகனை அவரின் இல்லத்தில் நேற்று சந்தித்தார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட அவர், "எங்களின் இலக்கு 2026இல் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் ஆட்சி. அதற்காக ஒரு செயல்திட்டத்தை திட்டமிட்டுள்ளோம். இன்று தமிழ் நாட்டில் அதிக இளைஞர்கள் உள்ள இயக்கம் எங்களின் இயக்கம். அவர்களின் வாக்குகள்தான் எங்களின் பலம். பா. ம. கவை சிறுமைப்படுத்துவற்காக, திராவிட கட்சிகளின் உத்தியால் சாதிக் கட்சி அடையாளம் எங்கள் மீது சுமத்தப்பட்டது" - என்றார். (ஐ)

# சிதம்பரம் கோயில் சொத்துகளை மதிப்பீடு செய்வதற்கு எதிர்ப்பு!

*சென்னை, ஜுன் 01*

இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் சிதம்பரம் நடராஜர் கோயிலின் சொத்து விபரங்கள் குறித்து ஆய்வு நடத்த வருவதற்கு தீட்சிதர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் வரும் 7, 8 ஆகிய திகதிகளில் இந்து சமய அறநிலைத் துறை அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்யவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், கோயில் பொது தீட்சிதர்கள், "உச்ச நீதிமன்ற தீர்ப்பு உள்ளது. இது எங்களை கட்டுப்படுத்தாது" என்று கூறி இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் கோயிலில் ஆய்வு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தின் நகல்களை குடியரசுத் தலைவர், பிரதமர், தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட பலருக்கு அனுப்பியுள்ளனர்.

# சகோதரன், சகோதரி வெட்டிப் படுகொலை

## புத்தளத்தில் திங்கள் இரவு கொடூரம் கொலையாளி வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன். 01

புத்தளம் மாவட்டம், நவகத்தேகம - முல்லேகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லேகம பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சகோதரனும், 25 வயதுடைய சகோதரியுமே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக மனைவியின் மூத்த சகோதரர் வீட்டுக்கு வந்துள்ளார். அதன்போது கணவன் அவரை வெட்டிப் படுகொலை செய்துள்ளார். அதேநேரத்தில் மனைவியையும் கணவன் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரான 27 வயதுடைய சந்தேகநபர் காயங்களுக்குள்ளான நிலையில், புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# தெற்கில் போராட்டம் வடக்கில் விசாரணை

## தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம்

கொழும்பு, ஜூன். 01

**தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி விலைவாசி உயர்வு போன்ற அத்தியாவசிய நெருக்கடிகள் என்பவற்றைக் கண்டித்து அரசுக்கு எதிராக தெற்கில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வடக்கில் உள்ள இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறித்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி விலைவாசி உயர்வு போன்ற அத்தியாவசிய நெருக்கடிகள் என்பவற்றைக் கண்டித்து அரசுக்கு எதிராக இளையோர் போராடிவரும் நிலையில் அத்தகைய போராட்டம் வடக்கிலும் நடக்குமா? நடக்கிறதா? என்ற தோரணையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் விசாரணை நடைபெறுகின்றது.

இது ஒருவகை அச்சுறுத்தல் என்றே தோன்றுகின்றது. காலம் காலமாக உரிமைக்காக உயிருக்காக உறவுகளுக்காகப் போராடி நொந்துபோய் ஏதோ நடப்பது நடக்கட்டும் என்ற பெருமூச்சோடு "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்" என்ற நம்பிக்கையோடு, தெற்கில் இன்று மக்கள் கொதித்தெழுந்ததை ஏளனம் செய்யாமல் இன்னும் எமக்குத்தான் துன்பங்கள் இழப்புகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அமைதியாக இருக்கும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு தொடர்ந்தும் அச்சத்தை ஊட்ட நினைப்பது வேடிக்கையானது. வேதனைக்கு உரியது.

இதனை விசனமாக வெளியிடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. ஏனெனில் அது எமது தலைவிதி. கல்வியில் கடைநிலை. பொருளாதாரத்தில் கடைநிலை. உற்பத்தியில் கடைநிலை. தொழில் வழங்கலில் கடைநிலை. இவற்றை சீர்செய்ய எவராலும் முடியாது. யாருமே உதவிக்கும் வரமாட்டார்கள்.

தெற்கின் போராட்டம் பற்றி தமிழ் அரசியல்வாதிகள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அப்போராட்டத்தின் பிரதம செயற்பாட்டாளர் கைது செய்யப்பட்ட சம்பவத்தையும் படித்தோம்.

ஆகையால் ஜனநாயக வழிமுறைப் போராட்டங்களை நசுக்குவதை விட்டுவிட்டு அப்போராட்டங்களுக்கான தீர்வை வழங்க முயற்சி செய்யுங்கள். உண்பதற்கே வழியில்லாமல் இருக்கும் எங்களை தொடர்ந்தும் அச்சுறுத்தாதீர்கள்-என்றுள்ளது. (அ)

# ரனிந்து சேனாரத்ன பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூன். 01

நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டிருந்த சமூக செயற்பாட்டாளரான "ரெட்டா" என அழைக்கப்படும் ரனிந்து சேனாரத்ன பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன் பாகவுள்ள வீதியில் சட்டவிரோத ஒன்றுகூடல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# கோட்டாவின் வரிச் சலுகையே நாடு அழிவதற்கு முழு காரணம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 01

கோட்டாபய அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே 600 மில்லியன் ரூபா வரிச்சலுகையை வழங்கியதன் மூலம் ஒரு சிறு குழுவினர் ஆறுதல் அடைந்தது எனவும், அதன் விளைவாக இன்று முழு நாடும் அழிந்துள் ளது எனவும் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையா டல் நேற்று முன் தினம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இடம்பெற்றது.

இந்நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பாக இரண்டரை வருடங்களாக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்பியதாக இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் சிறிய மற்றும் நடுத்தர தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்பட்டது. (அ)

# தந்தையும் மகளும் சடலங்களாக மீட்பு

## களுத்துறையில் சம்பவம்

கொழும்பு, ஜூன். 01

வீடொன்றிலிருந்து தந்தையும் மகளும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு - ஹினட்டியன்கல பகுதியில் நேற்று முன் தினம் இரவு இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்த தாயாரினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய சடலங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். தந்தை வீட்டிலிருந்த கதிரையிலும், மகள் வீட்டு வரவேற்பறையிலும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

69 வயதான தந்தையும், 33 வயதான அவரது மகளுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலங்கள் களுத்துறை - நாகொட பொது வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கொலையா என்பது தொடர்பில் இதுவரை கூற முடியாதுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு!

## அடுத்துவரும் மாதங்களில் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்



கொழும்பு, ஜூன். 01

சந்தையில் மரக்கறிகளின் விலை மீண்டும் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் அடுத்து வரும் மாதங்களில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சகல மரக்கறிகளினதும் ஒரு கிலோகிராம் விலை 400 ரூபாவுக்கும் அதிகமாகவுள்ளது.

கரட், பீட்ரூட், போஞ்சி, உருளை கிழக்கு, கோவா மற்றும் தக்காளி உள்ளிட்டவற்றின் விலை இவ்வாறு அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் போஞ்சியின் விலை 600 ரூபாவை கடந்துள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையம் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ)

# 25,000 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் கப்பல் வார இறுதியில் இலங்கைக்கு

கொழும்பு, ஜூன். 01

மேலும் 25,000 மெற்றிக் தொன் எரிவாயுவுடனான கப்பல் ஒன்று இந்த வார இறுதியில் நாட்டை வந்தடையும் என லிட்ரோ தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நாள்தோறும் 50 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றில் 60 சதவீதமானவை அதாவது சுமார் 30 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த நேரத்தில் கப்பல் வராத காரணத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை லிட்ரோ நிறுவனம் இடைநிறுத்தியிருந்தது. (அ)

# 21இல் இழுத்தடிப்பு செய்கிறது மொட்டு!

## ஜனாதிபதி தலைமையிலான சந்திப்பிலும் முடிவு இல்லை

கொழும்பு, ஜுன் 01

**அரசியலமைப்பிற்கான 21ஆவது திருத்தச்சட்ட மூலத்தால் ஆளுங்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் வெவ்வேறான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ உட்பட மொட்டு கட்சியின் பல எம்.பிக்களும் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டமூலம் , பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் உணவு பஞ்சம் என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன.

அவ்வேளையில் 21 ஆவது திருத்தச்சட்டம் உள்ளிட்ட அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு முன்னர், பொருளாதாரப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும், அதற்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

பொருளாதார பிரச்னை தீரவேண்டுமெனில், அரசியல் உறுதிப்பாடும் அவசியம். எனவே, இரண்டையும் சமாந்தரமாக முன்னெடுக்கலாம் என மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எனினும், உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. நாளை வியாழக்கிழமை மொட்டு கட்சி எம்.பிக்கள், நிதி அமைச் சருடன், 21 தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளனர். அதன் பின்னரே கட்சியின் உறுதியான முடிவு அறிவிக்கப்படும் என தெரியவருகின்றது. (அ)

# கொழும்பில் அடை மழை

கொழும்பு, ஜுன். 01

கொழும்பின் பல பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு முதல் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் கொழும்பில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையும் காற்று நிலைமையும் அடுத்த சில நாட்களில் சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படு கின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-45 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கங்கைகளின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, ஜுன். 01

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது மழையுடனான வானிலை நிலவி வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அத்தன கல்லு ஓயா, ஜின், நில்வலா, களு கங்கை மற்றும் களனி கங்கைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகுந்த அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

*21ஆவது திருத்தச் சட்டம்*

# ஐந்து யோசனைகளை முன்வைத்த எதிர்க்கட்சி

கொழும்பு, ஜுன். 01

நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 21வது திருத்தச் சட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஐந்து யோசனைகளை சமர்ப்பித்துள்ளது.

அந்த யோசனைகள் பின் வருமாறு:

- ஜனாதிபதி அமைச்சுக்களை வகிக்க முடியாது என்ற 19ஆவது திருத்தத்தின் விதிகளை அரசியலமைப்பில் இணைத்தல்.

- சட்ட சபையின் பரிந்துரையின் பேரில் மத்திய வங்கியின் ஆளுநருக்கு மேலதிகமாக நாணயச் சபையின் ஏனைய உறுப்பினர்களை நியமித்தல்.

- தேசிய முன்னுரிமைகள் மற்றும் மதிப்பீட்டு ஆணையத்தை ஒரு சுயாதீன ஆணையமாக நியமித்து அதன் உறுப்பினர்களை சட்ட மேலவையின் பரிந்துரையின்படி நியமித்தல்.

- ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஆளுங் கட்சியின் அனைத்து அலுவலகப் பணியாளர்களும் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய அறிவிப்புகளை வெளியிடுவதைக் கட்டாயமாக்குதல். அவ்வாறு செய்யத் தவறினால் கடுமையான தண்டனைகளுக்கான சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல்.

- திருடப்பட்ட சொத்துக்களை மீளப் பெறுவதில் இலங்கை அரசாங்கம் ஒரு தரப்பினராக இருந்து, சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குதல். (அ)

# கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் கண்டெடுப்பு!

கொழும்பு, ஜுன். 01

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் கண்டெடுக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று மிதப்பதைக் கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்.

குறித்த பெண் தவறுதலாக நீர்த்தேக்கத்தில் விழுந்து உயிரிழந்தாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரா அல்லது, எவராவது கொலை செய்து நீர்த்தேக்கத்தில் எரிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை என்றும் உருக்குலைந்த நிலையிலேயே சடலம் காணப்படுகின்றது என்றும் மேலதிக விசாரணைகளைத் தொடர்வதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பொரலஸ்கமுவ நகர சபையின் தவிசாளர் கைது

கொழும்பு, ஜுன். 01

பொரலஸ்கமுவ நகர சபை தவிசாளர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகை பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

# தெமட்டகொடையில் உணவகம் நடத்தி வந்த பெண் படுகொலை!

கொழும்பு, ஜுன். 01

தெமட்டகொடை ரயில் பாதையில் உள்ள உணவகம் ஒன்றில் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை ரயில் பாதையில் உணவகம் ஒன்றை நடத்தி வரும் குறித்த பெண், கடந்த 29ஆம் திகதி இரவு படுகொலை செய்யப்பட்டதாகவும் அவர் வைத்திருந்த தங்க நகைகள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பன திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொழும்பு மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தனது 10 வயது மகனுடன் உறங்கிக்கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் பின்னர் உணவகத்தின் ஊழியர்கள் மூவர் காணாமல்போயுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பாக தெமட்டகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரச வருவாயை உயர்த்த சில சட்டங்களில் திருத்தம்

## பிரதமர் ரணில் தீர்மானம்



கொழும்பு, ஜுன். 01

அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க சில சட்டங்களில் திருத்தம் செய்ய பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

அதன்படி 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டம், வற் வரி சட்டம், 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச்சட்டத்தில் மாற்றத்தை கொண்டுவர அவர் தீர்மானித்துள்ளார்.

அத்தோடு 2011 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட. விதிப்பனவுச் சட்டம், 1988 ஆம் ஆண்டு 40 ஆவது இலக்க நிதி மேலாண்மைச் சட்டத்தின் 2003 இன் 3 ஆம் பிரிவை மாற்ற முன்மொழிந்துள்ளார்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, 695 பில்லியனுக்கான இடைக்கால கணக்கறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்த தீர்மானத்திற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# 21இற்கு ஆதரவாக வாக்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனை

## அஜித் பெரேரா அறிவிப்பு



கொழும்பு, ஜூன். 01

அரசியலமைப்பின் 21வது திருத்த வரைவில், உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால், அதற்கு ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

21ஆவது திருத்தத்தை, ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக நிராகரிக்கவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தத்தில் உள்ள சில சரத்துக்களுடன் தமது கட்சிக்கு உடன்பாடில்லை. இதனை கடந்த வெள்ளிக்கிழமையன்று அரசாங்கத்திடம் சுட்டிக் காட்டியதாக அஜித் பெரேரா குறிப்பிட்டார்.

இந்தநிலையில் தாம் முன்மொழிந்துள்ள மாற்றங்கள் செய்யப்பட்டால், 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக, ஐக்கிய மக்கள் சக்தி வாக்களிக்கும் என்று அவர் கூறினார்.

தமது கட்சியினால் முன்மொழியப்பட்ட மாற்றங்களில் ஜனாதிபதியின் கீழ் எந்த அமைச்சும் இருக்க முடியாது என்ற விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டுமென்பதையே, ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துவதாகவும் அஜித் பெரேரா குறிப்பிட்டார். (அ)

# தேயிலை தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலைமை

கொழும்பு, ஜூன். 01

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு காரணமாக தென்னிலங்கை தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு என்பன காரணமாக ஏராளம் நெருக்கடிகளை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் உற்பத்திக்கான செலவும் அதிகரித்துள்ளதுடன், அதனை ஈடுகட்டப் போதுமான அளவில் தேயிலை உற்பத்தியும் நடைபெறாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்சாலைகளை இயக்குவதற்கு டீசல் தேவை என்ற போதிலும் அண்மைக்காலமாக நாட்டில் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக உயர்தரமான தேயிலைத்தூள் உற்பத்தி செய்வதிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் தமக்கு தேயிலைத் தொழிற்சாலைகளை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அதன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த விசேட குழுவை நியமிக்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜூன். 01

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக உயர்மட்ட நிபுணர் குழுவொன்றை பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கவுள்ளார்.

திறைசேரியின் முன்னாள் செயலாளர் கலாநிதி ஆர். எச். தி. சமரதுங்க தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

இதில் உறுப்பினர்களாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர்



மஹிந்த சிறிவர்தன,மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கலாநிதி ஷாமினி குரே உள்ளிட்டவர்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த குழுவில் டெஷால் டி மெல், கலாநிதி சரத் ராஜபத்திரன, தினேஷ் வீரக்கொடி, அனுஷ்கா விஜேசிங்க, டானியல் அல்போன்சோ மற்றும் துஷ்னி வீரக்கோன் ஆகியோரும் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி மற்றும்பொருளாதார ஸ்திரப்படுத்தல் அமைச்சின் கீழ் இந்த குழு செயற்படவுள்ளதுடன், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை விரைவில் வகுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)



# இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புகள் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன். 01

இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆலோசனை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான மலேசியத் தூதுவர் டெங்யெங் தாய் உடன் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலின் போது மலேசியத் தொழில் வாய்ப்புக்கான பயிற்சி மையம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான விஸாவை இடைநிறுத்தியிருந்த மலேசியா தற்போது மீண்டும் விஸா வழங்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்புகளை வழங்குவது குறித்த அமைச்சரின் வேண்டுகோள் கவனத்திற் கொள்ளப்படும் என்று மலேசியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

கடந்த 2016ஆம்ஆண்டு மனுஷ நாணயக்கார வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சராக இருந்த போதும் இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சஷி வீரவன்ஸவுக்கு பிணை



கொழும்பு, ஜூன். 01

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸவுக்குக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்குப் பொய்யான தகவல்களை முன்வைத்து முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டமை, அதனை உடன் வைத்திருந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்ஸவை குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் அவருக்கு இரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ள நிலையில், அதற்கு எதிராக அவர் முன்வைத்துள்ள மேன்முறையீட்டு கோரிக்கை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மேன்முறையீட்டுக் கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான், சஷி வீரவன்சவை இவ்வாறு பிணையில் விடுவிப்பதற்கு உத்தரவிட்டார். (அ)

# ஒரு வாரம் கடந்துள்ளபோதும் மண்ணெண்ணெய் இல்லை!

திருமலை, ஜூன். 01

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மண்ணெண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறவில்லை.

இதனால் பகலிலும் இரவிலும் காத்திருந்து ஏமாற்றத்துடன் வெறுங்கையுடன் செல்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இராணுவத்தினர், பொலிஸார் என பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இன்மை காரணமாக பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக சாரதிகள் துறை சார் இயந்திர தொழிலாளர்கள், குடும்ப பெண்கள் என பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

திருகோணமலை நகர், கிண்ணியா, கந்தளாய், முள்ளிப்பொத்தானை உள்ளிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்று பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல கான்கள் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் அடுக்கப்பட்டிருந்தன.

உப்பு செய்கை உற்பத்தியாளர்கள், ஆழ் கடல் இயந்திர மீனவர்கள் தொழிலின்றி இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (அ)

# அண்ணனை பதவி நீக்கியதே நான் எடுத்த கடும் தீர்மானம்!

## ஆளும் கட்சிக் கூட்டத்தில் கோட்டாபய



கொழும்பு, ஜூன். 01

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கியதே தனது அரசியல் வாழ்க்கையில் மிகவும் கடினமான தீர்மானம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆளும் கட்சி கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக தான் அந்த கடினமான தீர்மானத்தை எடுத்ததாகவும், நாட்டின் எதிர்காலத்துக்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க மீது நம்பிக்கை வைத்து பிரதமராக நியமித்ததாகவும், அந்த நம்பிக்கையில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் தமக்கு ஆதரவளிப்பார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

# சீன உதவிப் பொருட்கள் வெள்ளிக்கிழமை வரும்!

கொழும்பு, ஜூன். 01

சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 76 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தின் முதல் தொகுதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாட்டுக்கு வரும் என்று கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இலங்கைக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்க பிரதமர் லீ கெகியாங் நடவடிக்கை எடுத்துள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# போரும் வீழ்ந்து வரும் உலகப் பொருளாதாரமும்

**பேராசிரியர் மு.நாகநாதன்**

மானுட வரலாற்றில் சமுதாயம் நாடு போன்ற அமைப்புகளில் அரசியல் தலைமை தோன்றியவுடன் போர்களும் முகிழ்த்தன. மன்னராட்சி முறை வலிமைப் பெற்றவுடன் போர்களும் பெருகின. தொன்மைகால போர்கள் வீரத்தின் அடையாளமாகப் போற்றப்பட்டன. மாவீரன் அலெக்சாண்டர் இன்றைய இந்திய பஞ்சாப் பகுதிகளில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு போரிட்ட போது மக்களுக்குப் பெரும் உயிரிழப்பில்லை என்று கூறப்படுகிறது. போர்வாள், வேல், கேடயம் போன்ற ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டன. யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்ற பிரிவுகளும் மெல்ல மெல்ல போரில் படைக்கலன்களாகச் செயல்பட்டன. மாமன்னர் அசோகர் நடத்திய போர்களில் பல ஆயிரக்கணக்கான படை வீரர்கள் மாண்டனர் என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. பௌத்தக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மன்னர் அசோகர் இதற்கு பின்பு போர்களைத் தவிர்த்தார். பௌத்த நெறிகளை உலகெங்கும் எடுத்துச் சென்றார்.

உலகில் முதன்முதலில் சீனாவில்தான் 10ஆம் நூற்றாண்டில் நெருப்பை உமிழும் கைகளால் இயக்கப்படும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் போர்களில் பயன்படுத்தப்பட்டன.

13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் ஐரோப்பிய நாடுகளில் துப்பாக்கி வடிவில் சிதறி வெடிக்கும் வகையில் ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன. மன்னராட்சி முறை ஐரோப்பாவில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய காலத்தில் இந்த ஆயுதங்கள் மென்மேலும் புதிய வடிவில் வடிவமைக்கப்பட்டன. இருப்பினும் படைவீரர்களைத் தவிர்த்துப் பொதுமக்களுடைய உயிரிழப்பு குறைவாகவே இருந்தது.

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி முறைகள் பல வடிவங்களில் ஏற்பட்டாலும் உயிர்க்கொல்லி ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முறையும் கைவிடப்படவில்லை. நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளில் போர் புரிந்து பல நாடுகளை அடிமைப் படுத்தினார். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவின் மீதும் போர் தொடுத்தார். பல ஐரோப்பிய நாடுகள் இந்தப் போரினால் பெருமளவில் பொருளாதார இழப்புகளைச் சந்தித்தன.

பல ஆய்வாளர்கள் 13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற போர்களால் சில இலட்சம் கோடி ரூபாய் இழப்பும் பல இலட்சம் இராணுவ வீரர்களின் உயிரிழப்பும் ஏற்பட்டன என்று குறிப்பிடுகின்றனர். 18ஆம் நூற்றாண்டில் பொருளியல் அறிஞர் ஆதம் சுமித் “சுயாட்சியுடைய சமுதாய அமைப்புகளை ஆயுதங்களைப் பெருக்கி வன்முறைகளையும் சீரழிவுகளையும் ஏற்படுத்துவதுதான் அரசினுடைய முதன்மையான பணியாக வளரத் தொடங்கியது” எனக் குறிப்பிட்டுள்ளார். அறவழிகளை முற்றிலும் புறந்தள்ளிப் போர் வழியாக பிற நாடுகளின் பகுதிகளைக் கைப்பற்றுவதே ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் முதன்மையான பணியாகப் போற்றப்பட்டது. பொதுச் செலவு என்பதே போர்ச்செலவு என வளரத் தொடங்கியது. இதைக் கண்டனம் செய்யும் வகையில் 18ஆம் நூற்றாண்டில் லியான் சே (Leon Say (1786)) என்ற பிரெஞ்சு நாட்டுப் பொருளாதார அறிஞர் பொதுச் செலவு என்பதே உலகம் தழுவிய தீமைகளில் ஒன்றானது என்றார். மேலும் பொதுச் செலவு என்ற நிதியியலில் சுட்டப்படும் அமைப்பு தேவையற்றது எனவும் கூறினார்.

வட்டார அளவில் இவ்வாறு பல போர்கள் நடந்தன. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடந்த போர்கள்தான் உலகப் போராக முதன்முதலில் வெடித்தது (1914-1918). ஐரோப்பிய நாடுகளுக்குள் நடந்த இந்தப் போரில் 3 கோடியே 74 இலட்சம் படைவீரர்கள் ஒரு கோடியே 30 இலட்சம் பொது மக்களும் உயிரிழந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டதால் போரைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1920 இல் 42 நாடுகள் இணைந்து நாடுகளின் மன்றம் (League of Nations) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு உருவான பின்பு பல பன்னாட்டு வர்த்தக வணிகச் சட்டங்கள் உருவாயின என்றாலும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கப் போர் வெறியைத் தடுக்க முடியவில்லை.

பல வியப்பான நிகழ்வுகளுக்கும் பற்றாக்குறையில்லை. பெர்ட்ரண்டு ரசல் போன்ற அறிஞர்கள் போர்களுக்கு எதிராகக் களம் கண்டனர். சிறை பிடிக்கப்பட்டனர். ஆனால் முதல் உலகப் போரின் போது இங்கிலாந்தில் இருந்த காந்தியார் அந்நாட்டிற்கு ஆதரவாக இந்தியர்கள் போர்ப்படையில் சேர வேண்டும் என வலியுறுத்தினார். போரில் பங்கு பெறுவது வீரம் என வர்ணித்தார். முதல் உலகப் போரில் இங்கிலாந்து படையில் பங்கு பெற்று 43 ஆயிரம் இந்தியர்கள் உயிரிழந்தனர். போர் முடிந்த சில மாதங்களிலேயே இங்கிலாந்து ஏகாதிபத்திய அரசு தனது இராணுவ அடக்குமுறைகளை இந்திய மக்களின் மீது ஏவி ஜாலியன் வாலாபாக் (1919) படுகொலையை நிகழ்த்தியது. காந்தியாரின் நெருங்கிய நண்பர் சார்லே ஆண்டுருஸ் நான் தனிப்பட்ட முறையில் அவரின் இந்தச் செயலுக்கு ஒரு போதும் உடன்பட முடியவில்லை. மனவருத்தத்தோடு இந்தக் கருத்தில் அவரோடு வேறுபடுகிறேன் என்றார். காந்தியின் தனிச்செயலராகப் பணியாற்றிய மகாதேவ் தேசாய் காந்தியின் பிரித்தானியப் போர்ப்படை ஆதரவு தொடர்ந்து பல கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது உண்மை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போரினால் (1939-1945) உலகப் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்தது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் உட்படப் பல நாடுகளில் இப்போர் மூண்டது. 2 கோடியே 50 இலட்சம் படைவீரர்கள் உயிரிழந்தனர். 2 கோடி மக்கள் பல நாடுகளில் ஏதிலிகளாகத் தள்ளப்பட்டு சொத்துகளையும் வீடுகளையும் இழந்தனர்.

இரண்டாம் உலகப் போர் முடிவடையும் காலக் கட்டத்தில்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் 1945இல் உருவானது. போரினால் ஏற்பட்ட பேரழிவுகள், உயிரழிவுகள், வள அழிவுகள், வாழ்வாதார அழிவுகள் மீண்டும் ஒரு போரினால் ஏற்படக் கூடாது என்ற உயரிய கொள்கை அடிப்படையில் தான் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை பிரகடனம் 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. போர் முடியும் தருவாயில் மின்சாரத் துண்டிப்பு இருந்த காலக்கட்டத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட்டின் துணைவியார் எலினார் ரூஸ்வெல்ட்டும் பிரான்சு நாட்டின் சட்ட இயல் அறிஞருமான ரெனே காசின் அவர்களும் பல வல்லுநர்களோடு கலந்தாலோசித்து இந்த அறிக்கையை எழுதினர். இரவிலும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இவ்வறிக்கையை எழுத வேண்டுமா என்ற கேள்வியை பலர் கேட்டனர். சட்ட இயல் அறிஞர் ரெனே காசின் மனிதனுடைய இயல்பு மாறக்கூடியது, ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்லும் தன்மையைப் பெற்றது. எனவே இந்த அறிக்கையை விரைந்து எழுதி மானுட உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்க முற்படுகிறோம் என்றார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வட்டார அளவில் நடந்த பல போர்கள் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உயரிய நெறியைச் சிதைத்துவிட்டன. பல ஐரோப்பிய நாடுகள் தங்களின் ஆயுத வலிமையால் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை அடக்கி காலனிகளாக மாற்றிப் பெரும் பொருளாதாரச் சுரண்டலை 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தின. வடிவங்களாக மாறின. ஆதிக்கப் போக்கும் ஆணவப் போக்கும் இன்றும் தொடர்கின்றன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் கூட்டுப்பொறுப்பை முழு அளவிற்குச் சிதைத்து இம்மன்றத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் சில நாடுகள் வைத்தன. கட்டுப்படுத்தியுள்ளன என்பதே உண்மை.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பல்வேறு பொருளாதார, மருத்துவ, சமூக, குழந்தைகள் நலம், தொழிலாளர் நலன் போற்றுகிற அமைப்புகள் வெளியிடும் பல்வேறு அறிக்கைகளாலும் பல்வேறு துயர் துடைப்பு நடவடிக்கைகளாலும் இன்றளவும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தேவை இன்றியமையாததாக அமைந்துள்ளது. போருக்குப் பின் துயர்துடைக்கும் பணிகளையே இந்த அமைப்புகள் செய்து வருகின்றன.

சான்றாக 1950களில் வியட்நாம் மீது பிரான்சு நடத்திய போர் 1960களில் அமெரிக்கா வியட்நாம் மீது நடத்திய போர் 1980களில் நடந்த ஈரான்-ஈராக் போர், லெபனான் போருக்கு இணையான பல உள்நாட்டுப் போர்களும் இந்த ஆதிக்க நாடுகளால் தூண்டப்பட்டு நடைபெற்றன.

1962இல் இந்திய சீன எல்லையில் நடைபெற்ற சண்டை, 1965, 1971, 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் போர்கள் 1990ஆம் ஆண்டுகளில் வளைகுடா போர் 2009ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் தமிழர்களுக்கு எதிரான போர் ஆப்கானிஸ்தான் போர் போன்ற பல போர்களினால் உலகளவில் பொருளாதார சரிவுகள் மக்களின் வாழ்விடங்களில் ஏற்பட்ட இழப்புகள் உயிரிழப்புகள் எண்ணிலடங்கா.

சான்றாக 2003இல் அமெரிக்கா ஈராக் மீது நடத்திய போரின் ஓராண்டுச் செலவை கணக்கிட்ட அறிஞர்கள் ஜோசப் ஸ்டிக்லிஹ லிண்டா ஜே.பிலிமசு ஆகியோர் ஓராண்டில் மட்டும் 900 இலட்சம் கோடி ரூபாயை அமெரிக்கா செலவிட்டுள்ளது என்று தங்களது நூலில் (The Three Trillion Dollor War) கூறியுள்ளனர். “அமெரிக்காவின் உயர் அதிகார மட்டத்தில் இருப்பவர்கள் அளித்த தவறான தகவல்களின் அடிப்படையில் இந்தப் போர் தொடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையின் ஒப்புதலைப் பெறாமல் பன்னாட்டுச் சட்டங்களுக்கு எதிராக நடத்தப்பட்டபோர். பள்ளி இறுதித் தேர்வு எழுதக்கூடிய நிலையில் உள்ள 18 வயதான இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஹாலிபர்ட்டன் பிளாக் வாட்டர் செக்யுரிட்டி (Halliburton> Black Water Security) என்ற இரண்டு தனியார் ஒப்பந்தக்காரரர்கள் அதிக அளவில் போர்ச் செலவை உயர்த்திப் பயன் பெற்றுள்ளார்கள். நாற் பதாயிரம் அடி உயரத்தில் இருந்து மக்கள் மீது விமானங்கள் வழியாக எறி குண்டுகள் வீசப்பட்டன. உலக அளவில் இராணுவச் செலவிற்காகச் செய்யப்படுகின்ற செலவில் 47 விழுக்காட்டினை அமெரிக்கா மட்டுமே செய்தது” என்று இந்த அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

போர் என்பது ஆண்களையும் பெண்களையும் கொன்று குவிப்பதாகும். அவர்களை முடமாக்கிச் செயலிழக்கச் செய்யும் கொடுஞ் செயலாகும். இதற்கான செலவுகள் துப்பாக்கியின் கடைசிக் குண்டு வெடித்த பிறகும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்ற கருத்து இன்றும் உண்மையாகி விட்டதல்லவா?

இந்த நூல் வெளிவந்த பின்தான் அமெரிக்கா கொடுமையான முறையில் ஆப்கானிஸ்தானைத் தாக்கியது. இத்தகையப் போர்களால் அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்து ஏற்றத்தாழ்வுகள் பெருகி பொதுக் கடன் நாட்டினுடைய ஒட்டு மொத்த உற்பத்தியைவிடப் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளது. அதனுடைய அழிவுகளை அன்றாடம் தொலைக்காட்சியின் வழியாகக் காண முடிகிறது. நடைபெற்று வரும் இப்போரால் பொருளாதாரச் சீரழிவை உலகளவில் ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் சமையல் எரிவாயு உட்பட பெட்ரோலியப் பொருட்களின் விலை கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்து வருகிறது. 1990களில் உலகமயமாதல் என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தி உலகளவில் முற்றுரிமை முதலாளித்துவத்தை வளர்த்து விட்டது அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் என்பது தான் உண்மை.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் செயலாளராக இருக்கின்ற அன்டோனியோ கெட்டரஸ் 2020இல் நெல்சன் மண்டேலா ஆண்டு கருத்தரங்க உரையில் குறிப்பிட்ட கருத்து உற்று நோக்கத்தக்க தாகும். வரலாற்றில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது காலனி ஆதிக்கம்தான். உலகின் வடக்குப் பகுதியில் உள்ள நாடுகள் குறிப்பாக நான் சார்ந்த கண்டமான ஐரோப்பா அடக்குமுறையைக் கையாண்டு வன்முறை வழியாகத் தெற்கு நாடுகளின் மீது காலனி ஆதிக்கத்தைப் பல நூற்றாண்டுகளாகத் திணித்தது. உலகின் 50 விழுக்காட்டு மக்களின் மொத்த செல்வத்தை 26 பெரும் பணக்காரர்கள் தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டதனால் அப்பட்டமான ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார நிலையற்றத்தன்மை ஊழல் நிதிச்சிக்கல்கள் பெருகிவரும் குற்றச்செயல்கள் உடல் நலிவுகள் மன உளைச்சல்கள் ஆகியன இந்த ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுகிறது” என்றும் அன்டோனியோ குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் கொரானா பெருந்தொற்று உலகளவில் பரவி பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த கடுமையான மோசமான பொருளாதார நெருக்கடியிலும் பல நாடுகள் போர்ச் செலவினைக் குறைக்கவில்லை. உலக மக்கள் தொகை ஆய்வறிக்கையில் (2022) உலகில் அதிகமாக இராணுவத்திற்குச் செலவிடும் நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. வரிசைப் பட்டியலில் அமெரிக்கா சீனா இந்தியா ரஷ்யா இங்கிலாந்து சவுதி அரேபியா ஜெர்மனி பிரான்சு ஜப்பான் தென் கொரியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த நிலையில் உள்ளன. இதில் கொடுமை என்னவென்றால் மற்ற 9 நாடுகள் இராணுவத்திற்குச் செய்யும் செலவுத் தொகையை மொத்தமாகக் கூட்டிக் கணக்கீடு செய்யும் போது அமெரிக்காவின் செலவுத் தொகை 77800 கோடி டாலர் ஆகும். இது மற்ற 9 நாடுகளின் கூட்டுத் தொகையான 73000 கோடி டாலரை விட அதிகமாக உள்ளது. உலகில் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இடம் பெற்றுள்ள 193 நாடுகளில் இந்தப் பத்து நாடுகள்தான் இராணுவத்திற்காக அதிகம் செலவு செய்கின்றன.

மக்களின் அழிவில் ஆயுத வணிகர்கள் செழிக்கின்றனர். பெரும்பான்மையான மக்களின் நலத் திட்டங்களைப் புறக்கணித்து இராணுவச் செலவினை முன்னிறுத்துகின்றனர். நாடுகளின் அமைதியைச் சீர்குலைக்கின்றனர். “என்று தணியும் இந்தப் போர் வெறி? எப்போது மக்களுக்கு விடுதலை கிடைக்கும்?” இதற்கு விடைகாணாமல் உலகில் மானுட வளர்ச்சியையும் அமைதியையும் காண முடியாது.

## பண்பாட்டுப் படுகொலை : 1981 ஜுன் 1

# தீயில் சாம்பலான யாழ். நூலகமும்! நெருப்பில் கருகிய 'ஈழநாடு'வும்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா


தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச் சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்திய முக்கிய சான்று எனலாம்.

1981 ஜூன் 01 இல் யாழ் நூலக நிலையம் எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜே.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர்.



தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசாநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜூன் 01 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,1977 , 1983இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.




தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது.

### நெருப்பில் கருகிய 'ஈழநாடு'

இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது. இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டிடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டிடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜே.ஆர். அரசாங்கம் முயற்சித்தது.

இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்த போதும் நட்ட ஈடுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது.

தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கர வாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் “பேரினவாதத்தின் உச்சக்கட்டம்” என்றே குறிப்பிடுவர். பெரும்பான்மையான ஓர்இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.

### செங்கல்லும் வெண்தாமரையும்

1994 இல் சமாதான தேவதையாக வெள்ளைப்புறாவாக காட்சியளிக்க முயன்ற சந்திரிகா அம்மையார் தனது எதிராளி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க விற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக எடுத்த முக்கிய ஆயுதங்களில் ஒன்றாக இந்த நூல்நிலைய அழிவு இருந்தது.

காமினி திசாநாயக்கவின் இறப்புக்குப் பின் அந்த ஆயுதத்தை கீழே போட்ட சந்திரிகா தமிழரையும், உலகையும் ஏமாற்ற மட்டும் அதை இடையிடையே எடுத்து தூசு துடைப்பது வழமையாகும்.

சந்திரிகா அரசு கூட இதனை மனப்பூர்வமான பிரச்சினையாகக் கொள்ளவில்லை எனபதை அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுத்துக்காட்டின.

சரவதேச நிதி உதவிகளுடன் யாழ். நூல்நிலையப் புனருத்தாரண நிதி என்ற பெயரில் அவர் ஆரம்பித்த நிதியத்தில் சேர்ந்த பணத்தின் ஒரு பகுதி தென்பகுதி நூல்நிலையங்களுக்கு செலவிடப் பட்டது என்பது அக்காலத்தில் உறுதிப்பட்டது.

சமாதானப் பிரியையாக அவர் தென் பகுதியில் நடத்திய வெற்றிக் களியாட்டங்களில் புத்தகமும் செங்கல்லும் அவர் முன்வைத்த ஏமாற்றுக் கோசங்களில் ஒன்றாகும். அவர் சேகரித்த செங்கற்களுக்கு நேர்ந்த கதி என்பது தெரியாத போதும் அவர் சேகரித்த புத்தகங்களில் பெரும்பாலானவை சிங்களப் புத்தகங்கள் என்பது வெளிவந்த செய்தியாகும்.

1995 நடுப்பகுதியில் யாழ் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்ட நிலையில் யாழ் மக்களின் மனங்களை வெல்ல சந்திரிகா அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்று அங்குள்ள நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததாகும்.

இடிந்தழிந்த நிலையத்தை யாழ்ப்பாணத்திற்குக் குறியீடாக அடிக்கடி தொலைக்காட்சியில் காட்டி வந்த சந்திரிகா அம்மையார் நூல்நிலையத்துக்குப் புதிய கட்டிடம் ஒன்றை அமைக்கக்கூட முன்வரவில்லை. ஏற்கனவே இருந்த கட்டிடம் ஒன்றிற்கு வர்ணம் பூசிய தொலைக்காட்சி உரைமூலம் அதனைத் திறந்து வைத்ததை யாவரும் அறிவர்.

வரலாற்றையும் பண்பாட்டையும் ஆவணப்படுத்தி எதிர்காலத்துக்கு வழங்குவதில் உலகிற்கு பறை சாற்றுவதில் நீண்ட நெடும்பயணம் செய்து கொண்டுள்ள நவீன உலகு அறிவைத் தேடும் வழி முறைகளில் பல மைல்கள் பயணம் செய்துள்ளது.

ஈழத்தமிழர் தம் வரலாற்றை உலகிற்கு உண்மைகளை வெளிக்காட்ட ஆவணப்படுத்த வேண்டும்,

### “அணையாத அறிவாலயம்”

இனமேன்மை வாதத்தின் ஒரு அதீத வெளிப்பாடு தான் யாழ் நூலக எரிப்பு. அந்த வெளிப்பாட்டின் தீங்கையும் கொடுமையையும் வெளிப்படுத்தும் ஆவணமாக வெளிவந்த “அணையாத அறிவாலயம்” கவிதை தொகுப்பில்

இன்னும் இவர்கள்
பாதி மரத்தினில் 'பிரித்'
ஓதல் வேண்டுமா?
நல்ல நூல்களை எரித்து
குளிர் காயலாமே! என்று ஆத்திரம் கலந்த எதிர்க்குறிப்போடு கவிதைகள் அனலாய் பாய்கின்றன.


வாளேந்திய
சிங்கக் கொடியாளர்கள்
சிம்மாசனத்தில் ஏறிய பின்
மக்கட்
சிரங்களையே அறுத்தனரே
அரசாள்வோர்
ஹிட்லரின் அடிச்சுவட்டில்
தொடரும் இனவாதம்
ஹிட்லரை மீறுகின்றதோ! என வினா எழுப்பப்படுகிறது. யாழ்ப்பாண நூல் நிலையம் அழிக்கப்பட்ட கொடிய செயல் உணர்வுக் கூர்மையுள்ள தமிழ் உள்ளங்களை எவ்வளவு கடுமையாகத் தாக்கியுள்ளது என்பதை இக்கவிதைகள் மூலம் புலப்படுத்துகின்றன.



பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ் நூலகம் எரிந்த தனை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........  ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

...................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

...................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?




..................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**01.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**01.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# உமி அடுப்பினால் தீ விபத்து; மூன்று வீடுகள் எரிந்து சேதம்



அம்பாறை, ஜூன். 01

வீடொன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் வீட்டின் உடைமைகள் முழுமையாக சேதமடைந்துடன் இதனால் அருகில் இருந்த இரு வீடுகளுக்கும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது-02 ஆம் பிரிவு சாஹிரா கல்லூரி வீதியில் கடந்த திங்கட்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் சமையல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் மண்ணெண்ணெயை உமி அடுப்பில் உற்றும்போது தீ மேலெழுந்ததால் வீட்டினுள் காணப்பட்ட வைக்கோலில் தீ திடீரென பரவியது. இதனால் வீட்டில் இருந்த உடைமைகள் முழுமையாக சேதமடைந்தன.

அத்துடன் குறித்த வீட்டுக்கு அருகில் இருந்த இரு வீடுகளும் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த கல்முனை மாநகர தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (அ)

# வெறிச்சோடிக் கிடக்கின்றன கிழக்கு சதொச நிலையங்கள்

## ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் மக்கள்

**மட்டக்களப்பு, ஜூன். 01**

**மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்தில் சதொச விற்பனை நிலையங்கள் பொருட்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதனால் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காண முடிகின்றது.**



சதொச விற்பனை நிலையங்களில் கடந்த சில நாட்களாக கையிருப்பில் இருந்த பொருள்கள் விற்றுத் தீர்ந்துகொண்டே வந்த நிலையில் இப்போது பல சதொச விற்பனை நிலையங்கள் பொருள்கள் இல்லாது வெறிச் சோடிக் காணப்படுகின்றன.

தங்களுக்கு சதொச தலைமைக் களஞ்சியசாலைகளிலிருந்து நீண்ட நாட்களாக பொருள்கள் வந்து சேரவில்லை என சதொச விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே சதொச விற்பனை நியைலங்களில் சீனி மற்றும் அரிசியை தனியே வாங்க முடியாத கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. அதனால் அத்தியாவசியமாக தமக்கு சீனியையும் அரிசியையும் வாங்க வரும் மக்கள் அரிசிக்கும் சீனிக்குமாகச் சேர்த்து தமக்கு அத்தியாவசியமில்லாத பொருள்களையும் வாங்கவேண்டி வந்ததால் சதொசவில் இருந்த ஏனைய பொருள்களும் விற்றுத் தீர்ந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

மக்கள் இப்பொழுது பொருள்களை வாங்க முடியாது நிர்க்கதி நிலையை அடைந்துள்ளார்கள். தனியார் கடைகளிலும் கூட்டுறவுக் கடைகளிலும் இப்போது பழுப்பு நிற சீனி ஒரு கிலோகிராம் 300 ரூபாவாகவும் வெள்ளைச் சீனி 320 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. (அ)

# உலக புகைப்பொருள் எதிர்ப்பு தின ஊர்வலம்




அம்பாறை, ஜூன். 01

உலக புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை நினைவு கூறும் வகையில் கல்முனை பிராந்தியத்திற்கான பிரதான நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது

சாய்ந்தமருது பிரதேச வைத் தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.எச். கே.சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதம அதிதியாக கலந்துகொண்டார்

"புகைப் பொருள் பாவனை அற்ற தேசம்" எனும் தொனிப் பொருளில் அமையப்பெற்ற இந்த நிகழ்வின்போது புகைத் தலை தடுக்கும் வகையிலான வாசகங்களை கொண்ட பதாகை களை ஏந்திய வண்ணம் சாய்ந்த மருது மாவட்ட வைத்தியசாலை யின் வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையா ளர்கள் மற்றும் ஊழியர்கள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்

இதன் போது சாய்ந்தமருதில் இருந்து மாளிகைக்காடு வரை விழிப்புணர்வு ஊர்வலமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.பி.ஏ. வாஜித், பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஐ. எம்.இர்ஷாத், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யூ.எல்.நியாஸ் ஆகியோர்களும் கலந்துகொண்டனர். (அ)

# காணாமல்போன சிறுமியை 24 மணி நேரத்துக்குள் தேடிக் கண்டுபிடித்தனர் கல்முனை பொலிஸார்

அம்பாறை, ஜூன். 01

காணாமல் போன சிறுமியை 24 மணித்தியாலத்துக்குள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு கல்முனை பொலிஸார் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெண்கள் காப்பகத்தில் இருந்து குறித்த சிறுமி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் காணாமல்போனதாக பாடசாலையின் நிர்வாகத்தினர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் மாலை முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த காப்பகத்தில் ஒரு வருடமாக தங்க வைக்கப்பட்டிருந்த இச்சிறுமி பலரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், வழக்கு விசாரணையின் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் பாதுகாப்பிற்காக தங்க வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த சிறுமி தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகத்தில் சம்பவ தினமான ஞாயிற்றுக் கிழமை பகல் உணவை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும் பின்னர் திடீரென அவர் அங்கிருந்து காணாமல் சென்று போனதாகவும் பாடசாலை காப்பாளர் தெரிவித்ததை அடுத்து பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பொலிஸ் குழுவினர் மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் வைத்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு குறித்த சிறுமியை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுமி திங்கட்கிழமை இரவு கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உரிய தரப்பினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

குறித்த சிறுமி தனது விருப்பத்தின் பேரில் குறித்த காப்பகத்தில் இருந்து தப்பி சென்றதாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரண்டரை வயதுடைய அம்பாறைச் சிறுமி உலக சாதனை புத்தகத்தில் பெயர் பதித்தார்

அம்பாறை, ஜூன். 01

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை அல்ஃ -மினன் வீதி ஸர்ஜூன் அக்மல் பாத்திமா நுஸ்ஹா தம்பதிகளின் புதல்வியான மின்ஹத் லமி தனது இரண்டரை வயதில் 120 உலக நாடுகளின் தலைநகரங்களை இரண்டு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்தமை பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது. இவருக்கான இலச்சினை, பதக்கம், மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தனது இரண்டு வயதில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த மின்ஹத் லமி மருதமுனை வரலாற்றில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த முதலாவது சாதனை சிறுமியாவார். இந்த வர லாற்று சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேச மக்கள் பலரும் பாராட்டி வருகின்றார்கள்.

இச்சிறுமி தனது பெற்றோர் சொல்லிக் கொடுப்பதை கவனமாகச் செவிமடுத்து மனனம் செய்வதுடன், ஞாபகத்திலும் வைத்துக் கொள்வார். இவர் எதாவது ஒரு பொருளையோ, ஒரு இடத்தையோ அவதானித்தவுடன் அது பற்றி அறிந்து கொள்ள அதிக ஆர்வம் காட்டக் கூடியவர்.

அதனை அறிந்து கொண்டு சில நாட்களுக்கு பின்னர் அப்பொருள் பற்றியோ அவ்விடம் பற்றியோ தானாகவே சொல்லக் கூடிய திறமை அவரிடம் உண்டு. இவர் 300 இற்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை தெளிவாக சொல்லக் கூடிய திறமை யுள்ளவர். தமிழ் அகரவரிசையிலுள்ள 247 எழுத்துகளையும் மிக வேகமாக சொல்லக் கூடியவர். அத்துடன் மாதங்கள், வாரங்கள், நிறங்கள், பழங்கள், வடிவங்கள், உடல் உறுப்புகளின் பகுதிகள், பறவைகள், இலக்கங்கள், ஆங்கில எழுத்துக்கள் மற்றும் அதற்கான சொற்களையும் ஒழுங்குவரி சையாகவும், வரிசை இல்லாமலும் மிக வேகமாக சொல்லக் கூடிய திறமை இவரிடம் உண்டு. இவை தவிர பொதுஅறிவு உள்ளிட்ட விடயங்கள், 100 இஸ்லாமிய கேள்விகளுக்கான பதில்களை சொல்லக் கூடியவர். தற்போது அல் குர்ஆனின் பல சூறாக்களையும் மனனம் செய்து வருகிறார். (அ)



# புகையிலை ஆலையில் கியூபாவில் தீ விபத்து!

ஹவானா, ஜுன். 01

கியூபாவில் உள்ள புகையிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபா மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாயின.



பினார் டெல் ரியோவில் அந்நாட்டு அரசுக்குச் சொந்தமான புகையிலை சேகரிப்பு கிடங்கு மற்றும் உற்பத்தி ஆலையில் திடீரென தீப்பிடித்த நிலையில், அது மளமளவென பரவியது.

அங்கிருந்த பொருட்கள் வெடித்து சிதறியதுடன், விண்ணை முட்டும் அளவுக்கு கரும் நச்சுபுகை வெளியேறியது. சுமார் 26 தொன் அளவிலான விற்பனை தயாராக இருந்த புகையிலை பொருட்கள் தீக்கிரையாகின. (அ)

# நடுவானில் பறந்தவேளை அசந்து தூங்கிய விமானி!

## விமானத்தை தீவிரவாதிகள் கடத்தியதாக பதறிய அதிகாரிகள்

நியூயோர்க், ஜுன். 01

**இத்தாலி நோக்கி சென்றுகொண்டிருந்த விமானத்தில் நடுவானில் விமானி அசந்து தூங்கியதால் தீவிரவாதிகள் விமானத்தை கடத்திவிட்டார்களோ என கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் பதறிப்போயினர்.**




நியூயோர்க்கில் இருந்து ரோம் நோக்கி சென்றுகொண்டிருந்த ஐ.ரி.ஏ எயார்லைன்ஸ் ஏ.இசட் 609 விமானம் பிரான்ஸ் மீது பறந்து கொண்டிருக்கும்போது கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு திடீரென துண்டிக்கப்பட்டது.

அதிர்ச்சி அடைந்த அதிகாரிகள் விமானத்தை தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும், விமானியிடம் இருந்து எந்த தகவலும் வரவில்லை. தீவிரவாதிகள் விமானத்தை கடத்திவிட்டார்களோ என பதறிப்போன அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கு தகவலை அனுப்பினர்.

அதைத்தொடர்ந்து பிரெஞ்சு அதிகாரிகள் இரண்டு போர் விமானங்களை கண்காணிப்புக்கு தயார் செய்தனர். மேலும், பிரான்ஸ் அதிகாரிகள் இத்தாலி அதிகாரிகளுக்கு தீவிரவாத கடத்தல் நடக்கலாம் என்றும் எச்சரித்தனர். இந்த களேபரங்களுக்கு மத்தியில் சுமார் 10 நிமிடங்களுக்கு பிறகு விமானி கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்புகொண்டார்.

கடத்தல் எதுவும் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்த அதிகாரிகள் 10 நிமிடங்கள் சிக்னல் ஏன் நின்று போனது என்ற விசாரணையில் இறங்கினர். உபகரணங்களில் கோளாறுகள் ஏற்பட்டதால், கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று விமானி கூறினார். ஆனால் தீவிர விசாரணைக்கு பின் நடுவானில் விமானி உறங்கிய அதிர்ச்சி உண்மையை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

நடுவானில் ஒட்டோபைலட் வசதியில் விமானம் இயங்கிக் கொண்டிருந்தபோது, விமானி தூங்கியுள்ளார். இதன் விளைவாகவே தகவல் தொடர்பு முடக்கம் ஏற்பட்டதாக அதிகாரிகள் கண்டுபிடித்தனர். பொறுப்பின்றி செயல்பட்ட விமானியை எயார்லைன்ஸ் நிறுவனம் பணியிடை நீக்கம் செய்துள்ளது. "விமானம் ஒட்டோபைலட் வசதியில் சாதாரண வேகத்தில் பறந்தது. விமானம் அதன் பாதையில் இருந்து ஒருபோதும் திசைதிருப்பப்படவில்லை." என்று விமான சேவை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (அ)

# டோன்பாஸில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது

## கனரக ஆயுதங்களை கோரும் உக்ரைன்

கீவ், ஜுன். 01

டோன்பாஸில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளதால், கனரக ஆயுதங்களை மேற்கு நாடுகளிடம் உக்ரைன் கோரியுள்ளது.



கிழக்கு டோன்பாஸ் பகுதியில் நடைபெற்று வரும் கடுமையான தாக்குதல் குறித்து உக்ரைன் பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசகர் யூரி சாக் கூறுகையில்,

"சிறு பகுதிக்குள் சுற்றி வளைத்து, அழிக்க ரஷ்யா முயற்சிக்கிறது. உக்ரைன் படைகள் தங்கள் நிலையைத் தொடர்கின்றனர். அவர்கள் வசம் உள்ள பகுதிகளைக் காக்கிறார்கள். ரஷ்ய படையினர், அதிக துப்பாக்கி, அதிக கனரக பீரங்கிகளைக் கொண்டு தொடர் தாக்குதல் நடத்துகிறார்கள்.

பொதுமக்களின் வீடுகள், மக்களின் கட்டுமானங்கள் மற்றும் உக்ரைன் இராணுவத்தையும் தாக்குகிறார்கள். நிலைமை மிக மிக தீவிரமானது. உக்ரைன் படைகள் மேற்கு நாடுகளிடம் இருந்து, தாங்கள் நீண்ட காலமாக கோரி வரும் கனரக ஆயுதங்களை நிச்சமாக எதிர்பார்த்துள்ளனர்" என கூறினார்.

அதேநேரத்தில், டோன்பாஸில் சண்டையிடும் போது, உக்ரைன் படையினர் பொது மக்களின் கட்டுமானங்கள் மீது அட்டூழியமான தாக்குதல்களை நடத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியதாக ரஷ்யாவின் இன்டர்பொக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# ஆபிரிக்க நாடுகளுக்கான உதவி உக்ரைன் போரினால் பாதிப்பு!

ஜெனிவா, ஜுன். 01

உக்ரைனில் நடைபெற்றுவரும் போரால் ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கான உயிர்காக்கும் சிகிச்சை உணவுகளின் விலையும் அதிகரித்துள்ளது. ஆபிரிக்காவின் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கிவந்த நன்கொடையை பல்வேறு தரப்பினரும் தற்போது உக்ரைனில் இருந்து வெளியேறிய 6 மில்லியன் அகதிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

எனவே உக்ரைன் போர் மற்றும் தொற்றுநோய்கள் காரணமாக அடுத்த 6 மாதங்களில் உணவுகளின் விலை 16 சதவீதம் உயர்வதுடன், 6 இலட்சம் குழந்தைகள் சிகிச்சையை இழக்க நேரிடும் என்று யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)



# மோனலிஸா ஓவியம் மீது கேக் வீசி மாசுபடுத்திய நபர்!

## பாரிஸ் காட்சியகத்தில் சம்பவம்

பாரிஸ், ஜுன். 01

பாரிஸின் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ள உலகப் புகழ் மோனலிஸா ஓவியத்தின் கண்ணாடிக் கூண்டின் மீது நபர் ஒருவர் கிறீம் கேக்கை வீசி அசிங்கப்படுத்திய காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

ஞாயிறன்று அருங்காட்சியகத்தில் ஏராளமானவர்கள் ஓவியத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், சக்கர நாற்காலி ஒன்றில் வந்த நபர் ஒருவரே மோனலிஸா ஓவியம் மீது உருகும் கேக் துண்டு ஒன்றினை வீசியுள்ளார். அது கண்ணாடி மீது படிந்து ஓவியத்தை மறைக்கின்ற காட்சியைப் பலரும் வீடியோப் பதிவு செய்தனர். பாதுகாவலர்கள் உடனடியாக அந்த நபரை அங்கிருந்து வெளியேற்றிய காட்சியும் அதில் காணப்படுகிறது.

சுற்றுச் சூழல் பாதிப்புகள் மீது கவனத்தைக் கோரும் நோக்குடனேயேதான் இந்தச் செயலைப் புரிந்தார் என்று அந்த நபர் பின்னர் கூறியிருக்கிறார்.

36 வயதுடைய அந்த ஆண் ஒரு வயோதிபப் பெண் போன்று தோன்றும் விதமாக ஆடை அணிந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

"பூமியைப் பற்றிய சிந்தியுங்கள் - பலரும் அதன் அழிவுக்குக் காரணமாக இருப்பதால் - அது பற்றிச் சிந்தியுங்கள். ஓவியர்கள் பூமியைப் பாதுகாக்குமாறு கோருவதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அதற்காகவே நான் இச் செயலைப் புரிந்தேன்" - என்று அந்த நபர் தெரிவித்திருக்கிறார்.



ஓவியர் லியோனார்டோ டாவின்சியால் 16 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட மோனலிஸாவின் இந்த மூலப் பிரதி ஓவியம், 1950 இல் ஒருமுறை அசிட் வீச்சுக்கு இலக்கானது. 2009 இல் ரஷ்யப் பெண் ஒருவர் தனக்குப் பிரெஞ்சுக் குடியுரிமை மறுக்கப்பட்டதால் ஆத்திரமடைந்து, ஓவியம் மீது குவளை ஒன்றை வீசித் தாக்கியிருந்தார். (அ)

# உலகின் தலைசிறந்த பல்கலை மாணவர்களுக்கு சிறப்பு வீஸா!

## இங்கிலாந்து அறிவிப்பு

லண்டன், ஜுன். 01

உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் பயின்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்பிற்கு விண்ணப்பிக்க பிரத்தியேக வீஸா திட்டத்தை இங்கிலாந்து அறிமுகப்படுத்தி உள்ளது.

உலகின் தலைசிறந்த மாணவர்களை பணிய மர்த்தி பொருளாதாரத்தை உயர்த்த அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ் இளங்கலை அல்லது முதுகலையில் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு 2 ஆண்டுகளும், பி.எச்.டி முடித்தவர்களுக்கு 3 ஆண்டுகளும் வீஸா வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

உலகின் முன்னணி பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றிருக்கும் மாணவர்கள் அனுசரணைகளோ, வேலைவாய்ப்பு வீஸாக்களோ இன்றி பணிபுரிய அனுமதி அளிக்க முடிவு செய்துள்ளது. (அ)

ஈழநாடு





## சர்வதேச போட்டிகளுக்கு திரும்புகிறது இந்திய அணி!

புதுடில்லி, ஜூன் 01

ஐ. பி. எல். தொடர் நிறைவடைந்துள்ள நிலையில், இந்திய அணி தற்போது சர்வதேச போட்டிகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. இதன்படி, தென்னாபிரிக்கா அணியுடன் 5 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி விளையாடவுள்ளது.

இதற்காக, கே. எல். ராகுல் தலைமையிலான 18 பேர் கொண்ட அணியை இந்தியா ஏற்கனவே அறிவித்துள்ளது. போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இந்தத் தொடரைத் தொடர்ந்து, இந்திய டெஸ்ட் அணி ஜூன் 16ஆம் திகதி இங்கிலாந்து புறப்படும். அங்கு ஏற்கனவே இடைநிறுத்தப்பட்ட போட்டியில் இந்திய அணி விளையாடும். இதைத் தொடர்ந்து இந்திய அணி அயர்லாந்திலும் தொடர் ஒன்றில் பங்கேற்கவுள்ளது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இந்திய அணி:

கே. எல். ராகுல் ( அணித் தலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், இஷான் கிஷன், தீபக் ஹூடா, ஸ்ரேயாஷ் ஐயர், ரிஷப் பந்த், தினேஷ் கார்த்திக், ஹார்திக் பாண்ட்யா, வெங்கடேஷ் ஐயர், யஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல், ரவி பிஷ்னோய், புவனேஸ்வர் குமார், ஹர்சல் பட்டேல், ஆவேஷ்கான், அர்ஷ்தீப் சிங், உம்ரன் மாலிக். (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் காலிறுதியில் ஸ்வியாரெக்!

பாரிஸ், ஜூன் 01

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார் உலகின் முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாரெக்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது. இந்தத் தொடர் காலிறுதி சுற்றை எட்டியுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடந்த நான்காவது சுற்றுப் போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாரெக் சீனாவின் கியூ செங்கை எதிர்த்தார்.

முதல் செற்றில் செங்க், 7 -6 (7-5) என்ற கணக்கில் ஸ்வியாரெக்கை வீழ்த்தி முன்னிலை பெற்றார். ஆனால், அடுத்த இரு செற்களிலும் எழுச்சி கண்ட ஸ்வியாரெக், 6-0, 6-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டு காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோன்று, அமெரிக்காவின் பெகுலா, வெரோனிகா, கசாத்கினா ஆகியோரும் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)



# ஐரோப்பா சம்பியன்ஸ் லீக்; ரியல் மட்ரிட் அணி சம்பியன்!




பாரிஸ், ஜூன் 01

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் 1-0 என்ற கோல் கணக்கில் லிவர் பூல் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் அந்த அணி சம்பியன் ஆகியிருப்பது இது 14ஆவது முறையாகும். வேறெந்த அணியும் இவ்வாறு இரட்டை இலக்கத்தில் சம்பியன்ஸ் லீக்கில் வாகை சூடியதில்லை. அந்த அணிக்கு அடுத்தபடியாக, மிலன் 7 முறை கிண்ணம் வென்றுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், சனிக்கிழமை நள்ளிரவு (இலங்கை நேரம்) நடைபெற்ற இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் வெற்றிக்கான கோலை வினிசியஸ் ஜூனியர் 59ஆஆவது நிமிடத்தில் அடித்தார். சக வீரர் பெடெரிகோ வோல் வெர்டெ கோல் கம்பத்தின் வலது பக்கத்திலிருந்து தட்டிக் கொடுத்த பந்தை 6 யார் பெட்டிக்குள் இருந்தவாறு கோல் கம்பத்துக்குள் திருப்பி கோலாக்கினார் வினிசியஸ்.

மறுபுறம், இறுதிவரை லிவர்பூல் அணிக்கு கோல் வாய்ப்பு கைக் கெட்டாமல் பார்த்துக் கொண்டார் ரியல் மட்ரிட்டின் கோல் காப்பாளர் கோர்டாய்ஸ். சாடியோ மனே, முகமது சாலா உள்ளிட்ட லிவர்பூல் வீரர்களின் கோல் முயற்சிகளை அவர் அரணாக நின்று பல முறை தடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம், பயிற்றுவிப்பாளர் கார்லோ அன்செலோட்டியின் வழிகாட்டுதலின் கீழ் 4ஆவது முறையாக ரியல் மட்ரிட் சம்பியன் ஆகியிருக்கிறது. சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் இதுவரை வேறெந்த பயிற்றுநரும் ஒரே அணிக்கு இத்தனை முறை கிண்ணத்தை வென்று கொடுத்ததில்லை. (ஐ)

# ஆசிய கிண்ண தொடரை நடத்த இலங்கை தொடர்ந்தும் முயற்சி!




கொழும்பு, ஜூன் 01

ஆசிய கிண்ணத் தொடரை இலங்கையில் நடத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருவதாக சிறீ லங்கா கிரிக்கெட் சபையின் பொதுச் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதால் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி வேறொரு நாட்டில் நடத்தப்படும் என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. இன்னும் சில தினங்களில் அவுஸ்திரேலியாவின் மூவகை கிரிக்கெட் அணிகள் இலங்கை வரவுள்ளன. 3 போட்டிகள் கொண்ட இருபது 20 தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஆகியவற்றில் இலங்கையை அவுஸ்திரேலியா எதிர்த்தாடவுள்ளது.

இந்த மூன்று தொடர்களையும் நாங்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்தால் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்துவதில் எவ்வித சிக்கலும் ஏற்படாது என நம்புவதாக மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் தகுதிகாண் நாடு ஒன்று மாக 6 நாடுகள் பங்குபற்றும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஓகஸ்ட் 27ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதற்கு முன்பதாக தகுதிகாண் சுற்று ஓகஸ்ட் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அவுஸ்திரேலியாவில் இந்த வருட இறுதியில் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவிருப்பதால் இந்த முறை ஆசிய கிண்ண கிரிக்கெட் இருபது 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியாக நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மெத்வடேவ் அதிர்ச்சி தோல்வி

பாரிஸ், ஜூன் 01

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பிரபல வீரரான டானியல் மெத்வடேவ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது. இந்தத் தொடர் காலிறுதி சுற்றை எட்டியுள்ளது.

இந்நிலையில், நேற்று நடந்த ஆண்களுக்கான நான்காவது சுற்றுப் போட்டியில் முன்னணி வீரரான ரஷ்யாவின் மெத்வடேவை குரோஷியாவின் கிளிக் எதிர்த்து ஆடினார்.

இந்தப் போட்டியில் கிளிக், 6-2, 6-3, 6-2 என்ற செற்களில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)












# ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், ஜூன். 01

சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நீதிக்கான போராட்டம் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நேற்று இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல நூற்றுக்கணக்கான பெண்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் வலையமைப்பினர்,மூக ஆர்வலர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர்.

சிறுமி ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரியும் தொடர்ச்சியாக நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கவும் அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள், சிறுவர்களுக்கு விரைவில் நீதி நிலை நாட்டப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தியும் போராட்டம் இடம்பெற்றது. (அ)

# 695 பில்லியன் ரூபாவுக்கு குறைநிரப்பு பிரேரணை பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 01

**அத்தியாவசியமான பொதுச் சேவைகளை இடையூறு இன்றிப் பேணுவதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கான குறைநிரப்பு பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**


695 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணையை பாராளுமன்றில் முன்வைக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நிலவுகின்ற நெருக்கடியான பொருளாதார சூழல் காரணமாக பொதுமக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள அழுத்தங்களை இயலுமான வரையில் குறைப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தால் சலுகைத் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும், அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் குறைநிரப்பு பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, தேசிய பாதீட்டுத் திட்டத் திணைக்களத்தின் “பாதீட்டுத்திட்ட சலுகைச் சேவைகள் மற்றும் திடீர் தேவைகளின் பொறுப்பு“ என்ற கருத்திட்டத்தின் கீழ், 695 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்காக பாராளுமன்றத்தில் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)




# சீரற்ற காலநிலை காரணமாக கோட்டா கோ கமவுக்கு சேதம்

கொழும்பு, ஜூன். 01

நேற்று அதிகாலை முதல் கொழும்பின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவியது.

இதன்போது காலிமுகத்திடலில் பலத்த காற்று காரணமாக கோட்டா கோ கம பகுதியில் போராட்டக்காரர்களின் கூடாரங்கள் தூக்கி எறியப்பட்டுச் சேதமடைந்துள்ளன.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

(அ)

# அமெரிக்காவிலிருந்து வந்த மருந்து 12 நாட்களாக விமான நிலையத்தில்!

## உடன் விடுவிக்க சுகாதார அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூன். 01

அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளை உடனடியாக விடுவிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது குறித்து பணிப்புரை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களினால் குறித்த மருந்துகள் மற்றும் உபகரணங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நாட்டை வந்தடைந்து 12 நாட்கள் கடந்துள்ளபோதும், அவற்றை கட்டுநாயக்கவில் இருந்து விடுவிப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையிலே, குறித்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உடனடியாக விடுவிக்குமாறு சுகாதார அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 03 நாட்களுக்குள் அனுப்பட்ட மருத்துவப் பொருட்கள் 32 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொழும்புக்கு எடுத்துச் செல்ல 12 நாட்கள் ஆகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புகையிலை எதிர்ப்பு தினத்தை ஒட்டி முசலியில் விழிப்புணர்வு நடைபவனி!




மன்னார், ஜூன். 01

உலக புகையிலை எதிர்ப்பு தினமான நேற்று முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

முசலி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நடைபவனியில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், சிலாவத்துறை வைத்தியசாலை வைத்தியர் உட்பட்ட ஊழியர்கள், பிரதேச சபை, பிரதேச செயலக ஊழியர்கள், ஓட்டோ சங்க உறுப்பினர்கள், சிலாவத்துறை மதரஸா மாணவர்கள், பிராந்திய தொற்றா நோய் வைத்திய அதிகாரிகள் மற்றும் முசலி வைத்திய அதிகாரி அலுவலக பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அலுவலர்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# 8 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, ஜூன் 01

நாட்டின் சில பகுதிகளில் சீரற்ற வானிலை நிலவி வருவதன் காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியாவில் தொடர்கிறது எரிபொருளுக்கான வரிசை

வவுனியா, ஜூன். 01

நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் பல மணிநேரங்கள் காத்திருக்கின்ற அவலம் தற்போது வரை தொடர்கிறது.

வவுனியா பகுதியில் அதிக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருந்தும் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டும் டீசல் வழங்கப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் மாத்திரமே டீசல் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை இருப்பதால் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

(அ)

## இராணுவ...

நியமனம் பெற்ற விக்கும் லியனகே இன்று புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்பார்.

லெப். ஜெனரல் விக்கும் லியனகே, மாத்தளை விஜய கல்லூரியில் கல்வி கற்றிருந்தர். 1986ஆம் ஆண்டு ஒக்ரோபர் 27ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் கடேற் அதிகாரியாக இணைந்தார். தியத்தலாவை இராணுவ கல்விக் கல்லூரி மற்றும் பாகிஸ்தான் இராணுவ அக்கடமி ஆகியவற்றிலிருந்து தனது அடிப் படை இராணுவப் பயிற்சியைப் பெற்று, இரண்டாம் லெப்டினன்டாக கஜபா படைப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டார்.

பின்னர், லியனகே இறுதிக்கட்ட போர் நடவடிக்கையின்போது 57 மற்றும் 56ஆவது படையணிகளின் 8ஆவது கஜபா படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக இருந்தார். அத்துடன், ரண விக்ரம, ரணசூர பதக்கம், கிழக்கு மனிதாபிமான நடவடிக்கை பதக்கம், வடக்கு மற்றும் கிழக்கு நடவடிக்கை பதக்கம் உள்ளிட்ட பல பதக்கங்களை வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மிருக காட்சி...

றம் - உணவுத் தட்டுப்பாடு என்பன கடுமையான உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். வரவு - செலவு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கிய பணமும் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மிருகக்காட்சி சாலைகளுக்கு உணவை விநியோகித்தவர்களுக்கு 59 மில்லியன் ரூபாய் நிலுவைத் தொகையை செலுத்த வேண்டியுள்ளது. அத்துடன், இந்த வருடத்தின் எஞ்சிய பகுதிக்கு குறைந்தது 120 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திறைசேரியுடன் கலந்தாலோசித்து உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் போது அமைச்சர் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## துமிந்தவுக்கு...

எடுக்குமாறும் பணிப்பு விடுத்தனர்.

தவிர, துமிந்த சில்வாவை கைது செய்து மறியலில் வைக்கவும் இந்த நடவடிக்கைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் முன்னெடுப்பதற்கு தேவையான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்கவும் சட்டமா அதிபருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

நேற்றைய வழக்கில், ஹிருணிகா பிறேமச்சந்திர சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரனும் சுமணா பிறேமச்சந்திர சார்பில் சட்டத்தரணி எராஜ் டி சில்வாவும் முன்னிலையாகினர்.

மேலும், இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கும் ஒத்திவைத்தனர்.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர உட்பட நால்வர் உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கில் 2018ஆம் ஆண்டு துமிந்த சில்வா குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் துமிந்த சில்வா பொது மன்னிப்பின் அடிப்படையில் ஜனாதிபதியால் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவு வெளியான சிறிது நேரத்திலேயே துமிந்த சில்வாவின் சகோதரரும் பிரபல ஊடக நிறுவனத்தின் உரிமையாளருமான ரைனோ சில்வா பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை சந்தித்துப் பேசியுள்ளார். இந்த சந்திப்பு ரொஸ் மீற் பிளேஸில் உள்ள அமைச்சர் டிரான் அலஸின் தனிப்பட்ட அலுவலகத்தில் இடம்பெற்றதாக "நியூஸ் 19" செய்தி செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# எந்தவொரு எம்.பியும் 21ஐ எதிர்க்கமுடியாது

## விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 01

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோருக்கு வேலி கட்டும் 21ஆம் திருத்தச் சட்டத்தை எந்தவொரு பாராளுமன்று உறுப்பினரும் எதிர்க்கமுடியாது என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

அமரபுர நிகாயவின் மகா நாயக்க தேரர் தொடம்பஹல சந்திரசிறி தேரரை சந்தித்த பின்னரே இதனைத் தெரிவித்தார். இராஜகிரிய களபளுவாவ,கோதமி மாவத்தையில் உள்ள தபோவன விகாரையில் இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜயதாஸ, நாடு தற்போதைக்கு பொருளாதார சரிவொன்றை எதிர்நோக்கியுள்ளது. இதில் இருந்து மீண்டு வர நிலையான அரசாங்கம் ஒன்று அமையவேண்டும்.

அதனை முன்னிட்டே 21ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதனை எதிர்க்க எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் நியாயமான காரணங்கள் இருக்கப் போவதில்லை-என்றார். (அ)

## காணாமல்...

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சடலமாக மீட்கப்பட்ட சிறுமி தாய், தந்தையற்ற நிலையில் மாமனாரின் அரவணைப்பில் வசித்து வந்துள்ளார். நேற்று முன்தினம் தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற நிலையில் வழக்கமாக வீடு திரும்பும் நேரம் தாண்டியும் அவர் வரவில்லை.

இதையடுத்து வீட்டிலிருந்தவர்கள் அவரைத் தேட ஆரம்பித்தனர். விடயமறிந்து அயலவர்களும் தேடினர். சிறுமி கிடைக்காத நிலையில் நெளுக்குளம் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலில் அன்றிரவு ஆட்கள் நடமாட்டமற்ற பகுதியில் கிணறு ஒன்றில் சிறுமியின் சடலம் காணப்பட்டது. கிணற்றிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் கீழ்பகுதியில் சிறுமியின் காலணி மற்றும் புத்தகங்கள் மீட்கபட்டன. மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றை பொலிஸார் விசாரணை வலயத்துக்குள் கொண்டு வந்தனர்.

பாவனையற்ற நிலையில் காணப்பட்ட அந்த வர்த்தக நிலையத்தில் மதுபான போத்தல்கள் மற்றும் கயிறு என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

சிறுமியின் சடலத்தை மீட்ட பொலிஸார் உடற்கூற்றாய்வு பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வேறினத்த...

மேலும், காணியை வேறு இனத்தவருக்கு விற்பனை செய்த தம்பதியர், அவர்கிளன் பிள்ளைகள் மற்றும் அவர்களின் சந்ததியினருக்கும் ஊர் மக்கள் கூடி பல்வேறு தடைகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று அறிய வருகின்றது. (ஐ)

## 21ஆம் திருத்த...

பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு எதிராக கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்டோர் தாக்கல் செய்த பல மனுக்கள் நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவநேக அலுவிஹாரே, ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழுவின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெறுமதி...

நேற்று அறிவித்துள்ளது. பாராளுமன்றின் அங்கீகாரத்துடன், வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம்,வருமான வரியும் ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இதன்படி, தனிநபர் வருமான வரி சலுகையை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 18 இலட்சம் ரூபாயாகக் குறைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கைக்கு மருந்துகளை அன்பளித்தது பங்களாதேஷ்

கொழும்பு, ஜூன் 01

பங்களாதேஷ் அரசாங்கத்தினால் இலங்கைக்கு 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார மற்றும் நீர் வழங்கல் அமைச் சர் கெஹலிய ரம்புக்வெலவை சந்தித்து, பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் இந்த மருந்துகளை நேற்று கையளித்துள்ளார்.

79 வகையான அத்தியாவசிய மருந்துகள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய்க்கு தேவையான மருந்துகளும் அவற்றில் அடங்கும். (ஐ)

# 4 கோடி ரூபாய் தங்கத்துடன் தலைமன்னாரில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 01

தலைமன்னார் பகுதியில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன்துறை பிரிவினரால் 4 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுங்கப் பேச்சாளர் பிரதிப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் பகுதியில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான இரண்டு கிலோ தங்கத்துடன் சந்தேக நபர்கள் மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வடமத்திய கடற்படை தலைமையகத்திற்கு கிடைத்த தகவலின் பிரகாரம் தலைமன்னார் கடற்பரப்பில் சந்தேக நபர்கள் மூவருடன் தங்கம் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் புதுக்குடியிருப்பு மற்றும் மன்னார் பேசாலையை சேர்ந்தவர்கள் என சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன்துறை பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 21 மூலம் பஸில் ராஜபக்ஷவை நாம் வெளியேற்றியே தீருவோம்

## கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூன் 01

"பஸில் நிதி அமைச்சராக இருந்த போதுகூட நாம் அஞ்சவில்லை. தற்போது அவர் சாதாரண பஸில். நாடாளுமன்றத்தில் அவருக்குப் பெரும்பான்மை பலம் இருந்தாலும் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தின் ஊடாக அவரை வெளியேற்றுவோம்" என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"21 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றி, நாட்டையும் பாராளுமன்றத்தையும் பஸிலிடமிருந்து பாதுகாப்போம்.

பாராளுமன்ற அதிகாரம் பஸிலிடம் இருப்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 21ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, இரட்டைக் குடியுரிம கொண்ட பஸில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்கிற நம்பிக்கை எமக்கில்லை. ஆனாலும், நாடு குழியில் விழுந்துள்ளது. எனவே, இப்போது கட்சி அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு நாட்டைக் குழியிலிருந்து மீட்க வேண்டும்.

'கோட்டா கோ கம', 'ரணில் கோ கம' என்பற்றை ஒருபுறம் வைத்துவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார். (அ)

## அதீத போதை...

திடீர் சுகவீனம் அடைந்தனர் என தெரிவித்து மன்னார் மருத்துவமனைக்கு இருவரும் கொண்டு செல்லப்பட்ட நிலையில், மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன்னரே அவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிய வருகின்றது.

ஒரு வாகனத்தில் நான்கு பேர் கொழும்பு நோக்கிப் பயணித்தபோது நோய்வாய்ப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதீத போதைப் பொருள் பாவனையே இவர்களின் மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

வாகனத்தில் இருந்த எஞ்சிய இருவரிடமும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

## பணவீக்கம்...

மைப் பணவீக்கமே இந்த அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் 29.8 சதவீதமாக இருந்த பணவீக்கம் மேயில் 39.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஏப்ரலில் 46.6 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 57.4 சதவீதமாக அதிகரித்துள்ள அதேவேளை, உணவில்லாப் பணவீக்கம் 22 சதவீதத்திலிருந்து 30.6 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## அரசியலமைப்பு திருத்தத்தை எதிர்க்கின்றார் சரத் வீரசேகர

*கொழும்பு, ஜூன். 01*

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்தைத் தான் எதிர்க்கப் போவதாக ரியர் அட்மிரல் சரத் வீர சேகர தெரிவித்தார்.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதி பதியுடன் நேற்று முன் தினம் மாலை நடத்திய கலந்தா லோசனையின்போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்துக்கும் நான் ஆதரவளிக்க வில்லை. தற்போதைய 21ஆவது திருத்தச் சட்டத் தையும் ஆதரிக்கப் போவதில்லை.

நாடு முழுவதும் உள்ள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரின் அதிகாரங் களைக் குறைக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் நான் ஆதரிக்கமாட்டேன் - என்றார். (அ)

## நடேசனை கொன்றவர்கள் சுதந்திரமாக திரிகின்றனர்

### நினைவு நிகழ்வில் இந்திரகுமார் பிரசன்னா

*மட்டக்களப்பு, ஜூன். 01*

நடேசன் படுகொலை செய்யப்பட்டு 18 வருடங்களா கியும், அவரைப் படுகொலை செய்தவர்கள் மிகவும் சுதந்திரமாக, இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் கொடிய ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது மிக வேதனையான தும், இந்த நாட்டின் நீதியின் மேலுள்ள களங்கமுமா கவே பார்க்கப்படுகின்றது என தமிழீழ விடுதலை இயக் கத்தின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாணசபை முன் னாள் பிரதித் தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற படுகொலை செய்யப் பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐ.நடேசனின் 18ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், ஊகவியலாளர்களின் சுதந்திரத்தில் தலை யிடாமல் படுகொலை செய்யப்பட்ட நடேசன் உள்ளிட்ட ஏனைய பத்திரிகையாளர்களின் படுகொலை களுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன்நிறுத்தி ஊடகவியலாளர்களுக்கு நியாயபூர்வமான தீர்வினை வழங்க வேண்டும் - என்றார். (அ)

# இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயநிலை!

*கொழும்பு, ஜூன். 01*

இந்த மாதம் முதல் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருதயநோய் நிபுணர் வைத்தி யர் கோட்டாபய ரணசிங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருதய சத்திரசிகிச்சைகளுக் கான மருந்துகள் மற் றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் பற்றாக் குறையே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

சராசரியாக, வைத்தியசாலைக ளுக்கு நாளாந்தம் நான்கு இதய அறு வைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்ற போதிலும் இவை தற்போது குறைக் கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.


மேலும், அனைத்து இதய நோயாளிகளுக்கும் தேவையான எனோக்ஸாபரின் தடுப்பூசிக்கு வைத்தியசாலையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, இதய நோயாளிகள் அதிக ஆபத்தில் உள்ளதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது இதய அறுவைச் சிகிச்சைக்கான பல அவசர மருந்துகள் இல்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த மருந்துகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் கிடைக்காவிட் டால் ஏனைய இதய அறுவைச் சிகிச் சைகளும் தடைப்படும் அபா யம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



## ஜோசப் எய்டன் கூஞ்கு

தென்னிந்தியா வீரபாண்டியன் பட்டணத்தைச் சேர்ந்த ஜோசப் எய்டன் கூஞ்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை (29.05.2022) அன்று காலமானார்.

அன்னார் கேபிள் ரீவி உரிமையாளர் எடிசன் கூஞ்கு அவர்களின் பாசமிகு தந்தையாவார்.

நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்:
**எடிசன் கூஞ்கு.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 02 - 1967



மறைவு 28 - 05 - 2022

## கந்தசாமி பாஸ்கரன்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நோர்வே Oslo வை வதிவிடமாகவும் கொண்ட கந்த சாமி பாஸ்கரன் அவர்கள் 28.05.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தசாமி, சரஸ்வதி தம் பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ராசம்மா தம்பதிகளின் அருமை மரு மகனும்,லோகேஸ்வரி(நோர்வே) அவர்களின் பாசமிகு கணவரும்,நிரோசன், நிதுஷா ஆகியோரின் அரு மைத் தந்தையும்,காலஞ்சென்ற பத்மாவதி, தங்க மலர் (ஜேர்மனி), பகிரதன்(சுவிஸ்), லோகேஸ்வரி (இலங்கை), தேவசேனா(இலங்கை), கிருபாகரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சிறிதரன், தயாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

தகனம்
Wednesday, 08 Jun 2022 8:00 AM - 11:00 AM
Østre gravlund, Store kapell Tvetenveien 7, 0661 Oslo, Norway


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பகிரதன் - சகோதரன்.**

தொடர்புகளுக்கு:
**நிரோசன் - மகன்** Mobile : +4745805029
**நிதுஷா - மகள்** Mobile : +4798130482
**பகிரதன் - சகோதரன்** Mobile : +41797038317

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 11 - 1955



மறைவு 28 - 05 - 2022

## அல்பேட் அன்றூ ஜோர்ச்

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் அன்றூ ஜோர்ச் அவர்கள் 28.05.2022 சனிக்கிழமை அன்று கனடாவில் கால மானார்.

அன்னார், அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான ஞானப்பிரகாசம் அல்பேட் மேரி பிலோமினா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபமாலை நீக்கிலாப்பிள்ளை விக்ரோறியா கத்ரீனா தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி றோசலின் (மல்லிகா) அவர்களின் பாசமிகு கணவரும், மேவிஸ் மைதிலி, சஜீவன், கஜேந்தினி, காலஞ்சென்ற பவுஸ் ரினா தர்ஷாளினி மற்றும் றுஜிக்ஷன், கஜிக்ஷன் ஆகி யோரின் பாசமிகு தந்தையும், சோபியா, சுரேன், நிதர் ஷனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,கஸ்றோ, கஜோல், சஜோன், சமிரோன், சனாயா பவுஸ்ரினா, ஜோயான்ஷா, ஜோசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் ராசதுரை, துரைராசா, றீற்றா, அரியமலர், காலஞ்சென்ற புஸ்ப ராணி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ் சென்றவர்களான செல்வராசா, மனுவேற்பிள்ளை ஆகி யோரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்றவர்களான அன்றறா ரஜினி, வில்விறட் நோபேட் மற்றும் வின்சன் பயஸ் (கனடா), சில்வியா (மலர்- கனடா), எட்வேட் விஜயரட்ணம்(விஜயன்- கனடா), அருட்தந்தை ஜோசப் அருள்ராஜா(கிளறேசியன் சபை- இலங்கை), லிடியா சாந்தினி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற லலிதா மற்றும் மலர்(இலங்கை), காலஞ் சென்ற ஜெயசீலி மற்றும் சேவியர்(லண்டன்), ராஜன் (ஐக்கிய அமெரிக்கா), ராஜீ(கனடா), அன்ரனி(கனடா), சுதா(கனடா), காலஞ்சென்ற ராஜன் மற்றும் பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**பார்வைக்கு**
Friday, 03 Jun 2022 5:00 PM - 9:00 PM
Saturday, 04 Jun 2022 7:00 AM - 9:00 AM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

**திருப்பலி**
Saturday, 04 Jun 2022 10:30 AM - 11:30 AM
St. Aidan Roman Catholic Church 3501 Finch Ave E, Scarborough, ON M1W 2S2, Canada

**நல்லடக்கம்**
Saturday, 04 Jun 2022 11:30 AM - 12:30 PM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

**மதிய போசனம்**
Saturday, 04 Jun 2022 12:30 PM
The Estate Banquet & Event Centre 430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மைதிலி - மகள்.**

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| **மல்லிகா - மனைவி** | Mobile : +16476573768 |
| **மைதிலி - மகள்** | Mobile : +16476271640 |
| **சஜீவன் - மகன்** | Mobile : +16476861284 |
| **கஜேந்தினி - மகள்** | Mobile : +14164523472 |
| **றுஜிக்ஷன் - மகன்** | Mobile : +16473236596 |
| **கஜிக்ஷன் - மகன்** | Mobile : +14169480797 |
| **பயஸ் - சகோதரன்** | Mobile : +12893851212 |
| **விஜயன் - சகோதரன்** | Mobile : +16473092493 |
| **லிடியா சாந்தினி - சகோதரி** | Mobile : +16479950447 |

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேலையில்லா பட்டதாரி,பைரவா திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு